பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 14 சனிக்கிழமை 26.02.2022 கதிர் 113

**இனி இது ரகசியம் அல்ல!**

திரும்பவும் ஒரு விடயத்தைச் சொல்ல விரும்புகிறேன். கணக்குப் பிள்ளை பேசக் கூடாது, கணக்குப் புத்தகம் பேச வேண்டும். பல சமயங்களில் கணக்குப் புத்தகத்துக்கு மாறாக – வேறு விதமாக – கணக்குப்பிள்ளை பேசுவதால்தான் ☞2

# தாக்குதலை உடன் நிறுத்துங்கள்!

## புடினிடம் மோடி கோரிக்கை



தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் பேச்சு மூலம் தீர்வு காண வேண்டும் என்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ரஷ்ய ஜனாதிபதி புடினிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யப் படைகள் உக்கிரமான தாக்குதலை இரண்டாவது நாளாக நடத்தி வருகின்றன. வான்வழி, கடல்வழி மற்றும் தரைவழி என மும்முனைத் தாக்குதலை நடத்துவதால் பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. உக்ரைன் நாட்டில் ஏராளமான இராணுவ இலக்குகளை ரஷ்யப்படைகள் தாக்கி அழித்துள்ளன. அதேபோல் உக்ரைன் தங்களைத் தற்காத்துக்கொள்ள, ரஷ்யப் படைகளுக்குப் பதிலடி கொடுத்து வருகின்றது. இதனால் ☞11

# இலங்கையும் இந்தியாவும் 3 பாதுகாப்பு ஒப்பந்தங்கள்

## உடன்பாடும் ஏற்பாடுகளும் பூர்த்தி

கொழும்பு, பெப்ரவரி 26

இலங்கையும் இந்தியாவும் கடல்சார் பாதுகாப்பிற்கான ஒத்துழைப்பை அதிகரித்து மேம்படுத்தும் விதத்தில் பாதுகாப்பு தொடர்பான மூன்று ஒப்பந்தங்கள் மற்றும் ஏற்பாடுகளை இறுதி செய்யும் நெருக்கமான கட்டத்தை எட்டி உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. ☞11

## திருமலையில் இன்று கையெழுத்து வேட்டை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரி திருகோணமலையில் இன்று கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப்படவுள்ளது.

திருகோணமலை சிவன் கோயிலடி தந்தை செல்வா சிலைக்கு முன்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் இந்தக் கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப்படவுள்ளது. ☞11

## பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக நீர்கொழும்பிலும் கையெழுத்து வேட்டை!

### மூவினத்தவர்களும் பெருமளவில் பங்கேற்பு



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரி மூவின மக்கள் வாழும் நீர்கொழும்பில் நேற்று கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப்பட்டது.

நீர்கொழும்பு பஸ் நிலையம் முன்னால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோரின் ஏற்பாட்டில் இந்தக் கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப்பட்டது. ☞11

## கொரோனாவைச் சாதாரணமானதாக கருதுவது புத்திசாலித்தனமானதல்ல

### பிரதி சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை

கொரோனா வைரஸ் தொற்றைச் சாதாரணமானதாகக் கருதுவது புத்திசாலித்தனமானதல்ல எனப் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொரோனா பரிசோதனைகளை மேற்கொள்ளாத பல தொற்றாளர்கள் இன்னும் சமூகத்தில் இருக்கின்றனர் எனவும், அவர்களுக்கு எவ்வித கொரோனா அறிகுறிகளும் வெளிப்படுத்தப்படாமல் ☞2

## உக்ரைனில் வாழும் இலங்கையர்களுக்கு விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகம்

உக்ரைனில் தற்போது நிலவும் பதற்ற நிலை காரணமாக அங்கு வசிக்கும் இலங்கையர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்காக விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

உக்ரைனில் வசிக்கும் இலங்கையர்களுக்காக ☞11

## ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி வேண்டி சர்வதேசத்தை நாடுவதே ஒரே வழி

### இலங்கை ஆயர் பேரவை அறிக்கை

நீதியை நிலைநாட்ட சர்வதேச உதவியை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று இலங்கை ஆயர்கள் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் ☞11

## பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை அசமந்தப்போக்கு!

### ஐ.நா. ஆணையாளர் காட்டம்



இலங்கையின் கடந்த கால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலைச் செயற்படுத்துவதில் உள்ள அசமந்தப்போக்கு தமது விசனத்துக்குக் காரணமாக அமைந்துள்ளது என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் ☞11

## வெள்ளவத்தையில் வெளிநாட்டுப் பெண் சடலமாக மீட்பு!

கொழும்பு, வெள்ளவத்தையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் வசித்து வந்த நெதர்லாந்து பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

66 வயதுடைய பெண் அடுக்குமாடி ☞2




## ஈ.பி.டி.பி. மீது விசமத்தனமான அவதூறாம்; ஊடகங்கள் மீது அக்கட்சி கடும் பாய்ச்சல்!

"இலண்டனில் போர்க்குற்றங்களோடு தொடர்புபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட கைதுகள் தொடர்பான செய்திகளை வெளியிட்ட சில ஊடகங்கள், குறித்த சம்பவத்தை ஈ.பி.டி.பியின் மக்கள் நலச் செயற்பாடுகளுக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் ☞11

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பிரச்சினை.

நெப்போலியன் லண்டனில் கைது செய்யப்பட்டமை தொடர்பில் 'காலைக்கதிர்' வெளியட்ட செய்திக்கு 'மறுத்தான்' கொடுப்பதாக நினைத்துக் கொண்டு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பியின்) ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கை கணக்குப்பிள்ளை பேசும் விடயம் போலத்தான் இருக்கின்றது. கணக்குப் புத்தகத்தின் பதிவு அப்படியல்ல.

அந்த அறிக்கை முழுமையாகத் தனியான செய்தியாகப் பிரசுரமாகியுள்ளது.

"தற்போதும் எங்கெங்கோ நடந்தேறும் சம்பவங்களை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியுடன் தொடர்புபடுத்தி விஷமத்தனமான உள்நோக்கத்துடன் செய்தி பரப்புவதானது அவர்களின் அரசியல் ரீதியான உள்நோக்கம் கொண்ட செயலாகும்."

– இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா. பிரபலமான – சிரேஷ்ட – அமைச்சர். இப்போது நன்கு தேர்ந்த அரசியல்வாதியும் கூட. அவரின் நேரடிப் பார்வைக்கு ஊடாக இந்த அறிக்கை வந்திருக்காது என்று நினைக்கிறேன். இந்த விடயத்தில் இப்படி ஒரு மறுப்பறிக்கை – அதுவும் ஊடகங்கள் மீது பாயும் அர்த்தமில்லா அறிக்கை – 'பூமராங்' ஆகத் திரும்பும் என்பது அவருக்குத் தெரியும். இந்த அறிக்கையைத் தயாரித்து வெளியிட்ட அவரின் ஊடகப் பிரிவுக்கு அது விளங்கியிருக்காது என்று நினைக்கிறேன்.

நெப்போலியன் கைது லண்டனில்தான் நடந்தது. சில சமயங்களில் இப்போது அவர் பிணையில் வெளிவந்திருக்கவும் கூடும். ஆனால் தமிழ் அரசியலைப் பொறுத்த வரை அது எங்கோ நடந்தேறும் லண்டன் விவகாரம் அல்ல. யாழ்ப்பாணத்தில் இருபத்தியொரு ஆண்டுகளுக்கு முன்னர் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் கொலையுடன் சம்பந்தப்பட்ட தொடர் விளைவு.

ஆழமாக – விரிவாக – விலாவாரியாக – இந்த அறிக்கையக் கையாள விரும்பவில்லை. அதை வாசகர்களின் சொந்தக் கவனிப்புக்கே விட்டுவிடுகிறேன். ஆனால் இப்போது அறிக்கை வெளியிட்டிருக்கும் ஈ.பி.டி.பிஇன் ஊடகப் பிரிவுக்கு ஒரேயொரு விடயத்தை மட்டும் சுட்டிக்காட்டுவது போதுமானது என நினைக்கிறேன்.

நெப்போலியன் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு வழக்குகள் குறித்து இப்போது பிரஸ்தாபிக்கப்படுகின்றது. ஒன்று – நிமலராஜன் கொலை வழக்கு; மற்றது – வேலணைக்கு அண்மையாக வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் பிரசார அணி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு பேர் உயிரிழந்து, பலர் காயப்பட்ட சம்பவம்.

முதலாவதில் பிணையில் விடுவிக்கப்பட்ட நெப்போலியன் பின்னர் காணாமல் போனார். இரண்டாவதில் நெப்போலியன் மற்றும் மதனராஜன் உட்பட மூவருக்கு இரட்டை மரண தண்டனை விதிக்கப்பட்டது. அது தொடர்பான மேன்முறையீடு இன்னும் நிலுவையில் இருக்கக் கூடும்.

இந்த இரண்டு சம்பவங்களும் நடந்தேறிய காலத்தில் நெப்போலியனும், மதனராஜனும் தீவிர ஈ.பி.டி.பி. செயற்பாட்டாளர்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

இதை மட்டுமே சுட்டுவது போதுமானது என நினைக்கிறேன் அதற்கு மேல் ஊடகங்கள் மீதான மேற்படி அறிக்கைப் பாய்ச்சலுக்குப் பதிலளிக்க வேண்டிய தேவை இல்லை என்று எண்ணுகிறேன்.

மீண்டும் சொல்லுகிறேன். ஈ.பி.டி.பியின் மேற்படி ஊடக அறிக்கை அதன் செயலாளர் நாயகத்தின் பார்வைக்குப் போயிருக்குமானால் அவர் நிச்சயம் கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கல்லெறிய அனுமதித்திருக்க மாட்டார் என்பது உறுதி.

★ ★ ★

இது வேறு ஒரு கொசுறுத் தகவல்.

நாட்டில் தாங்க முடியாத மின்வெட்டு, எரிபொருள் வாங்க அந்நிய செலாவணிக் கையிருப்பு இல்லை. இலங்கை மின்சார சபையும், பெற்றோலியக் கூட்டுத் தாபனமும் நிதி மார்க்கம் தெரியாமல் தடுமாறுகின்றன.

ஆனால், கொழும்பு – 7இல் உள்ள அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் வீட்டுக்கு 2015 முதல் 2021 வரை மின்சாரம் விநியோகித்த வகையில் 1 கோடி இருபது லட்சம் ரூபா வரை நிலுவையாக செலுத்தப்படாமல் நிற்பதாக இலங்கை மின்சார சபை கடிதம் மூலமாக சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் அழுது கொட்டித் தீர்த்திருக்கின்றது.

நிலுவையில் தாம் இப்போது எழுபது லட்சம் ரூபாவைச் செலுத்தி விட்டார் என்றும் –

மிகுதி தன்னுடைய கணக்கு அல்ல என்றும், இலங்கை மின்சார சபையின் கணக்கீடு தவறு என்றும், தமக்கு முந்திய குடியிருப்பாளரின் கணக்கும் தனது பெயரில் கணக்கிடப்பட்டிருக்கின்றது என்றும் –

இப்போது 'கணக்கு விடுகிறார்' அமைச்சர் கெஹலிய.

ஒரு கோடி 20 லட்சத்துக்குள் 56 ஆயிரத்து 603 ரூபா நிலுவை – ஆறு ஆண்டுகளாக – நீடிக்கும் போது அந்த விநியோகத்தை இன்னும் வெட்டாத (துண்டிக்காத) இலங்கை மின்சார சபை, ஒழுங்காக மின் கட்டணத்தைச் செலுத்தி, நிலுவையே வைக்காத பொது மக்களுக்கு தினசரி ஐந்து மணிநேரம் மின்விநியோகத்தை 'கட்' பண்ணி, வதைக்கின்றது.

வல்லான் வகுத்தது சட்டம் என்பது இதைத்தானோ...?

– மின்னல் –

## வெள்ளவத்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

குடியிருப்பின் குளியலறைக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பெண், இளைஞர் ஒருவருடன் வாடகைக்கு குடியிருப்பில் வசித்து வந்தார் என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சமூக ஊடக தளமான வீஷ்வவீலிவ மூலம் அவர் இளைஞருக்கு அறிமுகமானவர் என்றும் மேலும் தெரியவந்துள்ளது.

அவர் அந்த இளைஞரைச் சந்திப்பதற்காக இலங்கை வந்துள்ளார் எனவும், அதன் பின்னர் அவர்கள் காதலில் ஈடுபட்டனர் எனவும் கூறப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் மாலை பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்தினூடாக அறிவிக்கப்பட்டதை அடுத்து குறித்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தைப் பொலிஸார் மேற்கொண்டு வரும் நிலையில், மரணத்துக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை.

## கொரோனாச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சுகதேகிகளைப் போன்று காணப்படுகின்றனர் எனவும் வைத்தியர் ஹேமந்த ஹேரத் குறிப்பிட்டார்.

அத்துடன், பூரண தடுப்பூசியேற்றம் மற்றும் முறையாக சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றல் என்பன கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்பைப் பெறக் கூடிய ஆகச் சிறந்த வழிமுறைகளாகும் எனவும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் கூறினார்.


JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

Director, Jaffna College Institute of Technology
Calls for the following courses

Civil Draughtperson (one year)
Minimum Qualification Passed G.C.E.(OL) with pass in Mathematics & English
Course leads to:
- Follow courses in level 5
- Register for drawings at local councils

Computer Certificate Courses
(3 - 4 months Part time)
- Certificate in MS OFFICE - (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer - (Page Maker, PhotoShop & CorelDraw)
- Web Designing (HTML, CSS, JAVA Script PHP, MYSQL)
- JAVA, C++ Programming

Foundation in Information Technology
(FIT) (6 months part time)
Pre degree course leads to Bachelor|s in Information Technology (BIT), University of Colombo.

Commencement in the 2nd week of March 2022
The Courses will be conducted at our Jaffna Centre too
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road, Jaffna.
For further details contact
Tel no: 0212250975 0212223382
Email: ejcitsltnet.lk.







கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## அங்கு யுத்தம்; இங்கு பாதிப்பு

**உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பு என்பது பூகோள ரீதியில் ஐரோப்பாவில் வெடித்துள்ள போர்.**

**1945 இற்குப் பின்னர் – இரண்டாம் உலக மகா யுத்தத்துக்குப் பின்பு – ஐரோப்பா சந்திக்கும் மிகப் பெரிய போராக இது அமையலாம்.**

**நாம் ஏற்கனவே இப்பத்தியில் குறிப்பிட்டமை போல ஐரோப்பாக் கண்டத்துக்கு இதன் விளைவுகள் பெருங் கண்டமாகலாம். இந்தக் கண்டத்தை, ஐரோப்பாக் கண்டம் எப்படித் தாண்டப் போகின்றது என்பது பல ஊகங்களைத் தருகின்றது.**

**ஆனால், இந்த விடயம் 'தென்னையில் தேள் கொட்ட பனையில் நெறி கட்டியமை போல', ஐரோப்பாவில் சண்டை நடக்க, இங்கு தென்னாசிய நாடான இலங்கையில் தொடர் சங்கிலி அதிர்வுகள் போல பல நெருக்கடிகளை உருவாக்கி நிற்கின்றமை அவதானிப்புக்குரியதாகின்றது.**

**இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களில் முன்னைய காலங்களைப் போல தேயிலை முக்கிய இடத்தை வகிக்காவிட்டாலும், ஏற்றுமதியில் இப்போதும் கணிசமான பங்கை அதுவே வகித்து வருகின்றது. இப்போது நேரடிச் சமரில் சம்பந்தப்பட்டிருக்கும் உக்ரைனும் ரஷ்யாவும்தான் இலங்கையின் தேயிலைக் கொள்வனவில் முன்னணியில் இருந்த நாடுகள்.**

**போரில் சிக்கியிருக்கும் உக்ரைனுக்கு இனித் தேயிலை ஏற்றுமதி எப்போது சாத்தியமாகும் என்பது கேள்விக் குறியே. அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் பொருளாதாரத் தடை விதித்திருக்கும் ரஷ்யாவுக்கு தேயிலை ஏற்றுமதி சாத்தியமாவது என்பதும் அத்தகைய குழப்பமான நிலைதான். எனவே இலங்கையின் தேயிலை ஏற்றுமதிக்கு இந்த ஐரோப்பியச் சமர் நேரடிப் பாதிப்பை – பின்னடைவை – தரும் என்பது உறுதி.**

**கொரோனாப் பேரிடரினால் சுற்றுலாத்துறை வருவாயை இழந்து தடுமாற்றத்தில் மூழ்கிக் கிடந்த இலங்கை இப்போதுதான் மெல்ல மெல்ல அந்தத்துறையைக் கட்டி எழுப்ப முயன்று வருகின்றது. பேரிடருக்குப் பின்னர் முதல் தொகுதி சுற்றுலாப் பயணிகள் உக்ரைனில் இருந்துதான் இலங்கை வந்தார்கள். அந்த நாட்டிலிருந்து கணிசமாக வந்து கொண்டிருந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை ஒரேயடியாகத் தடைப்படப் போகின்றது.**

**அது மாத்திரமல்ல, ரஷ்யாவின் தாக்குதலை அடுத்து உக்ரைனுக்கான அனைத்து சர்வதேச விமான சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளமையால், அந்த நாட்டில் இருந்து தற்சமயம் இலங்கை வந்துள்ள சுற்றுலாப் பயணிகளை இங்கு தங்க வைத்துப் பராமரிக்க வேண்டிய நெருக்கடி இலங்கைக்கு.**

**உக்ரைனுக்கான தொலைத் தொடர்பு சேவைகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றமையால், துருக்கியில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக இந்தச் சுற்றுலாப் பயணிகளை அவர்களின் தாய் நாட்டுக்குத் திருப்பி அனுப்பும் எத்தனங்களைக் கொழும்பு செய்து வருகின்றது.**

**ரஷ்யா மீது அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் விதித்திருக்கும் கடுமையான பொருளாதாரத் தடையும் இலங்கையின் கொடுக்கல் – வாங்கல் பரிமாற்றம், ஏற்றுமதி – இறக்குமதி நடவடிக்கைகளில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கூறப்படுகின்றது.**

**போதாக்குறைக்கு இந்தப் போர் வெடித்தமையை அடுத்து, சர்வதேச சந்தையில் எரிபொருள்களின் விலை உயருகின்றது. விநியோகம் பாதிக்கப்படும் இக்கட்டும் கூட உண்டு.**

**ஏற்கனவே அந்நிய செலாவணிக் கையிருப்புத் தீர்ந்து, எரிபொருள் போன்றவற்றின் இறக்குமதிக்கு வழி தெரியாது தடுமாறிக் கொண்டிருக்கும் இலங்கைக்கு, சர்வதேச மட்டத்தில் ஏற்படும் இந்த அதிரடி நிகழ்வுகளும் மாற்றங்களும் நிச்சயம் பல பின்னடைவுகளைத் தரும் என்பது மறுக்க முடியாத உண்மைதான்.**

**அங்கு யுத்தம், இங்கும் பாதிப்பு. இதுதான் நிலைமை.**

# நாட்டில் எரிபொருள் நெருக்கடி குறித்து அரசிடம் சஜித் எழுப்பிய கேள்விக்கணை!



நாட்டின் அந்நியச் செலாவணி பற்றாக்குறையை முகாமைத்துவம் செய்ய முடியாத அரசாங்கம், தற்போது நாட்டை கடுமையான எரிசக்தி நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. கடந்த சில மாதங்களாக, சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடித்தாலும், வீட்டு உபயோக எரிவாயு சிலிண்டர்களைக் கொள்வனவு செய்ய, மக்கள் பல மணி நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தற்போது, வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்ப, பெற்றோல் நிரப்பு நிலையங்களுக்கு முன் வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும்,சில நிரப்பு நிலையங்கள் ஏற்கனவே தங்கள் சொந்தக் கூப்பன் முறையிலான திட்டங்களில் எரிபொருள் வழங்கத் தொடங்கியுள்ளன.

– இவ்வாறு நாடாளுமன்றில் தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

அண்மைக் காலமாக இலங்கையின் மின்சாரத் தேவை கணிசமாக அதிகரிக்கவில்லை என்றாலும், நாட்டின் நாளாந்த மின்சாரத் தேவையில் 2 ஆயிரத்து 700 மெகாவாட் உற்பத்திக்குத் தேவையான எரிபொருளை விநியோகிக்க முடியாமல் போனதே மின் நெருக்கடிக்கு முக்கிய காரணமாகும். உயர்தரப் பரீட்சை மாணவர்கள் மின்வெட்டுக்கு அல்லது இருட்டுக்கு மத்தியிலேயே பரீட்சையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

தொடர்ச்சியாக மின்சாரம் தடைப்படுவதால் சிறு மற்றும் நடுத்தர தொழில் துறைகள் மற்றும் வளர்ந்து வரும் சுற்றுலாத் துறைக்குக் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர்களின் போட்டித்தன்மையான ஊடக அறிக்கைகளைத் தவிர எந்த விதத் தீர்வும் காண முடியாத அரசாங்கம், இன்றும் நாட்டின் பெரும்பாலான பகுதிகளை ஒரு நாளைக்கு சுமார் ஐந்து மணித்தியாலங்கள் இருளில் வைத்துள்ளது.

நெருக்கடியை மேலும் சிக்கலாக்கும் வகையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு நிதி வழங்குவதில் கடன் வரம்புகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கி ஆளுநர் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் உலக சந்தை விலை இன்று சுமார் 97 அமெரிக்க டொலர் வரை வந்துள்ளதோடு, அது மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிகிறது. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தவறிய அமைச்சர்கள், துறைமுகத்துக்கு எண்ணெய்க் கப்பல் ஒன்று வந்தடைந்தால் அதனை வரவேற்கும் விழாக்களையே நடத்துகின்றனர்.

மேலும்,எரிபொருள் வாங்குவதற்குப் போதிய அந்நியச் செலாவணியை திரட்ட முடியாத நிலை மக்கள் மீதே திணிக்கப்பட்டு, அதிகளவில் மின்சாரம் பாவிக்கின்றனர் எனவும் அதிகளவு வாகனம் ஓட்டுகின்றனர் எனவும் கூறி பொதுமக்கள் மீது குற்றம் சாட்டுகின்றனர்.

நாட்டின் எரிசக்தி பாதுகாப்பிற்கு முன்னுரிமையோ அல்லது குறைந்தபட்ச முகாமைத்துவ அறிவு பயன்படுத்தப்பட்டிருந்தால் நாட்டின் எரிசக்திக்குத் தேவை தொடர்பான சரியான முன்னாயத்த பகுப்பாய்வு அடிப்படையில் திட்டமிடப்பட்ட எரிபொருள் கொள்வனவை நோக்கிச் செல்வதே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய விடயமாகும்.

இதன் பிரகாரம்,இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருதி, பின்வரும் கேள்விகளுக்கு அரசாங்கத்திடமிருந்து குறிப்பிட்ட பதில்களையும் விளக்கங்களையும் எதிர்பார்க்கிறேன்.

அந்நியச் செலாவணி பற்றாக்குறையால் நாடு எரிபொருளின்றி கடும் நெருக்கடியில் சிக்கித் தவிப்பதை அரசாங்கம் ஏற்கிறதா?

வாகனங்களுக்கு பயன்படுத்தவென இன்று எத்தனை மெற்றிக் தொன் பெற்றோல் மற்றும் டீசல் கையிருப்பில் உள்ளது? இது எத்தனை நாள்களுக்குப் போதுமானது? வாகனங்களுக்குத் தேவையான அளவு எரிபொருளை எதிர்காலத்தில் தட்டுப்பாடு இன்றி தொடர்ந்து வழங்க முடியும் என்பதை அமைச்சரால் உறுதி செய்ய முடியுமா?

அனல் மின் நிலையங்களை இயக்கத் தினமும் எவ்வளவு டீசல் மற்றும் எரிபொருள் தேவைப்படுகிறது? அந்தளவுகளை வழங்க இன்னும் எவ்வளவு காலத்துக்குப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் முடியுமாக இருக்கும்?

அடுத்த 3 மாதங்களுக்கேனும் நாட்டுக்குத் தேவையான எரிபொருளைப் பெற எவ்வளவு பணம் தேவைப்படும் என்று கணிப்பிடப்பட்டுள்ளதா? அது எவ்வளவு? அதற்குத் தேவையான அந்நியச் செலாவணியை எப்படிப் பெறுவது?

தடையில்லா மின்சாரம் வழங்கும் திட்டம் இல்லை என்றால், குறைந்தபட்சம் அடுத்த மாதத்துக்காவது மின்சாரத்தை துண்டிக்கும் திட்டவட்டமான ஒழுங்கு அரசாங்கத்திடம் உள்ளதா? அப்படியானால், அது என்ன?

கொவிட் தொற்றுநோயால் வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத்துறை, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறைகள், தொடர்ச்சியான மின்சாரம் இல்லாததால் மேலும் வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளது என்பது அரசாங்கத்துக்குத் தெரியாதா? அந்தத் தொழில் துறைகளை நிலைநிறுத்துவதற்குத் தடையில்லா மின்சாரம் வழங்கும் அரசின் திட்டம் என்ன? இன்னும் எவ்வளவு காலம் மக்கள் இருளில் இருக்க வேண்டி வரும்? – என்று கேள்விகளை எழுப்பினார்.

# யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரி - 2022 கல்வி ஆண்டுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், பெப்.26

யாழ்.தொழில் நுட்பவியல் கல்லூரியில் 2022 ஆம் ஆண்டுக்கான NVQ சான்றிதழ் மற்றும் டிப்ளோமா தரம் என 47 பல்வகையான கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அனைத்து முழு நேரக் கற்கைநெறிகளும் இலவசமான கற்கைநெறிகளாக இருப்பதுடன், தொழில் சார்ந்த கற்கைநெறிகளுக்கு மாதாந்தம் நாலாயிரம் ரூபா வரையான உதவித்தொகையும், போக்குவரத்துக்கான பருவகால சீட்டும் வழங்கப்படும்.

கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள் 15-03-2022 ஆம் திகதிக்கு முன்பாக "பணிப்பாளர், தொழில் நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விவரங்களுக்கு நேரடியாக தொழில் நுட்பவியல் கல்லூரியிலுள்ள தொழில் வழிகாட்டல் அலுவலர்களுடன் அல்லது 0212220028, 0212212402 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவும் தொடர்பு கொள்ளலாம்.

www.dtet.gov.lkஅல்லது mis.dtet.gov.lk என்ற இணையத்தினூடாகவும் தகவல்களை பெறமுடியும் எனத் தொழில் நுட்பக் கல்லூரியின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# “இந்த துறைதான் எனது அடையாளம் என்பது அப்போது எனக்கு தெரியாது”

**Lethu Beauty Parlour அழகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் லேத்திகா யோகேஸ்வரன் உடனான நேர்காணலிது.**



தர்ஷாயினி விஜயகுமார்
உரிமையாளர்
Tharsha Beauty Salon அழகுக்கலை நிறுவனம்

### ☞ உங்களைப் பற்றிய அறிமுகம்

நான் லேத்திகா யோகேஸ்வரன்.கிளிநொச்சியில் வசித்து வருகிறேன். Lethu Beauty Parlour அழகுக்கலை நிலையத்தை நடாத்திவருகிறேன். நான் க.பொ.த உயர்தரத்தை கற்று பின் அழகுக்கலைத்துறை கற்கையில் இணைந்து கொண்டு இது பற்றி கற்க ஆரம்பித்தேன்.க.பொ.த உயர்தரத்திற்கு பின்னர் எல்லோரும் ஒரு அரசாங்க வேலைக்குச் செல்ல வேண்டு மென்றவொரு எண்ணம் என்னை சுற்றியிருப்பவர்கள் மனதில் இருந்தது. ஆனால் அழகுக்கலைத்துறையில் எனக்கிருக்கும் ஆர்வத்தை கூறி இந்து துறையில் அடியெடுத்துவைத்தேன். கிளிநொச்சியிலுள்ள ஒரு அழகுக்கலை நிறுவனத்தில் எனது பயணத்தை ஆரம்பித்தேன்.

### ☞ அழகுக்கலைத் துறையில் எப்படி ஆர்வம் வந்தது?

எனக்கு அழகுக்கலைத்துறையில் ஆர்வம் வரக்காரணம் சிறுவயதிலிருந்தே நான் அழகுக்கலை சார்ந்த காணொலிகள் பார்த்தால் அதைப்போலவே செய்வேன். குறிப்பாக மருதானி போடுவதைப் பார்த்து அப்படியே போடுவேன். இப்படி என்னையே அறியாமல் இத்துறையில் ஒரு ஆர்வம் வந்தது. இந்த துறைதான் எனது அடையாளம் என்பது அப்போது எனக்கு தெரியாது. ஆனால் எனக்கிருக்கும் அழகுக்கலைத் திறமைகளை ஒவ்வொன்றாக நான் அறிந்துகொண்டதன் பின்னே இத்துறையையே தேர்ந்தெடுக்க வேண்டும். இதில் பிரசித்தி பெற வேண்டுமென்ற ஆர்வம் எனக்குள் அதிகரித்தது.

### ☞ இத்துறையில் நீங்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ன?

அந்த காலத்தில் அழகுக்கலை நிபுணர்கள் என்று கூறினாலே ஒரு கண்ணோட்டத்தில் பார்ப் பார்கள். ஆனால் தற்போது அந்த எண்ணப்பாடு மாறி யுள்ளது. அந்த எண்ணம் வருங்காலத்திலும் மாற வேண்டும். அழகுக்கலை நிபுணர்களாக இந்த சமுதா யத்தில் வெற்றிபெருவது ஒரு சவாலாக இருக்கின்றது. மற்றுமொரு சவாலாக நான் பார்ப்பது எனக்கான ஒரு தனிப்பட்ட பிரச்சினையை தான். அதாவது எனது அழகுக் கலைத்துறையில் ஓர்டர்கள் எடுப்பதற்கு அதாவது புதிய வாடிக்கையாளர்களை இணைத்து கொள் வதற்காக சமூக வலைத் தளங்களில் தொலை பேசி இலக்கத்தை பதிவு செய்கிறோம். ஆனால் இதனைக்கொண்டு பலர் தவறான அழைப்புகள், குறுஞ்செய்திகள் போன்றவற்றை அனுப்புகின்றனர். ஒரு தவறான அழைப்பின் மூலம் அந்த நாளே ஒருவித மனக்கசப்பை ஏற்படுத்தும். இதனை சமாளிப்ப தென்பது ஒரு பெண்ணாக நான் எதிர்கொள்ளும் சவால் ஒன்றுதான். இதனைத் தவிர எனது வாடிக்கையாளர்களை திருப்திபடுத்த ஒவ் வொரு விடயங்களையும் நுணுக்கமாக கவனித்து செய்யவேண்டும். இதுவும் ஒரு சவால் தான்.

### ☞ அழகுக்கலைத்துறையில் உங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளும் நீங்கள் அடைந்த சாதனைகளையும் பற்றி ஒரு சில..

அழகுக்கலைத்துறையில் கிடைக்கும் வாய்ப்பு என்று பார்த்தால் புதிய வாடிக்கையாளர்கள் எம்மை நாடிவருவது எனக்கொரு வாய்ப்பென்றே கூறவேண்டும். எனது பிரதேசத்திலுள்ள வாடிக்கையாளர்களைத் தாண்டி எனது அழகுக்கலையின் மேல் ஈர்ப்புகொண்டு என்னைத் தேடிவந்த வாடிக்கையாளர்கள் பெரும்பாலும் வெளிப் பிரதேசத்தவர்கள் தான். அதிலும் எனது அந்த அழகுக்கலை நிலையத்தை ஆரம்பித்து ஒரு வருடம் தான் ஆகிறது. இந்த குறுகிய காலத்திலேயே எனக்கு நிறைய ஓர்டர்கள் வருவதென்பதை நான் ஒரு வாய்ப்பாகவே கருதுகின்றேன். எனது வேலைகளில் முழுமையாக ஈடுபடுவதால் என்னால் இத் துறையை வெளிப்படுத்தும் நிகழ்வுகளில் பங்கு பற்றுவதற்கான நேரம் அமையவில்லை. ஆனால் அந்தவொரு வாய்ப்பை சரியான நேரத்தில் சரியான தருணத்தில் அமைத்துகொடுத்துள்ளது அருந்ததி நிறுவனமென்றால் அதற்கு மிகையாகாது. காரணம் மாற்று மோதிரம் எனும் மணப்பெண் அலங்காரக் காட்சியில் நான் பங்குகொள்ளும் வாய்ப்பை எனக்கு வழங்கியுள்ளனர். இவையெல்லாம் எனக்கு கிடைத்த அரிய வாய்ப்புகள் ஆகும்.

அழகுக்கலைத்துறையில் எனக்கு கிடைத்த இந்த வாய்ப்புகளை எல்லாம் எனது சாதனையாகவே பார்க்கிறேன். வாடிக்கையாளர்களை சேர்த்துக் கொண்டு ஒரு நிலையத்தை ஆரம்பிப்பவர்கள் உண்டு. ஆனால் நான் அப்படிச்செய்யவில்லை. என்மேலும் என் திறமைமேலும் எனக்கிருந்த நம்பிக்கையை கொண்டு இதனை ஆரம்பித்து தற்போது ஏராளமான வாடிக்கையாளர்களையும் இணைத்துகொண்டு வெற்றிகரமாக இந்த துறையில் சாதித்துவருகிறேன்.

### ☞ சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு நீங்கள் கூற நினைப்பது.

சாதிக்கவிரும்பும்பெண்கள்தம்மீது இந்தசமுதாயம் எழுப்பும் இழிவான கருத்துக்களையெல்லாம் புறந்தள்ளவேண்டும். ஒரு பெண்ணாக இருப்பவள் அப்படியிருக்க வேண்டும் இப்படியிருக்கவேண்டும் என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும் இந்த சமூதாயத்திற்கு மத்தியில் பெண்கள் இப்படித்தான் இருக்கவேண்டுமென்று சாதனை செய்து காட்டுங்கள். உங்களை உற்சாகப்படுத்தும் உங்கள் உறவுகளின் ஆதரவை உங்கள் பலமாகக்கருதிக்கொள்ளுங்கள். உங்களால் முடியுமென்று நீங்கள் நம்புவதை நிச்சயம் செய்து காட்டினால் நீங்களும் சாதனையாளர்கள் தான்.





காலைக்கதிர் Kalaikkathir

# சிங்கப்பூருக்கு விஜயம் செய்த நீதியமைச்சர் அலிசப்ரி அர்ஜுன் மகேந்திரன் பற்றி எதுவும் பேசப்படவில்லை!

இலங்கை நீதியமைச்சர் அலி சப்றி, ஒரு வாரத்துக்கு முன்னர், சிங்கப்பூர் உள்துறை மற்றும் சட்ட அமைச்சர் கே. சண்முகத்தின் அழைப்புக்கு அமைய அந்நாட்டுக்கு விஜயம் செய்துள்ளார். இதன்போது இரண்டு நாடுகளுக்கும் இடையில் சட்ட ஒத்துழைப்புகளை மேம்படுத்துவது தொடர்பாகப் பேச்சுகள் நடத்தப்பட்டன. எனினும் சிங்கப்பூரில் தங்கி இருக்கும் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள்ஆளுநர்அர்ஜூன்மகேந்திரனை இலங் கைக்கு கொண்டு வருகின்றமை தொடர்பானஎவ்விதபேச்சுகளும்நடைபெறவில்லை.

நீதியமைச்சர் அலி சப்றியின் சிங்கப்பூர் விஜயம் தொடர்பாக சிங்கப்பூரில் உள்ளஇலங்கைஉயர்தூதரகம்அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சிங்கப்பூர் உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் கே. சண்முகத்தின் அழைப்புக்கு அமைய கடந்த 13 ஆம் திகதியில் இருந்து 17 ஆம் திகதி வரை இலங்கை நீதியமைச்சர் உயர் மட்டப் பிரதிநிதிகளுடன் சிங்கப்பூருக்கு விஜயம் செய்தார்.

நீதியமைச்சர் இந்த விஜயத்தின் போது சிங்கப்பூர் அமைச்சர் சண்முகத்தை சந்தித்து இரு நாடுகளின் சட்டத்துறை சம்பந்தமான ஒத்துழைப்புகள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடினார்.

இந்த விஜயத்துக்கான அழைப்பு மற்றும் இலங்கை பிரதிநிதிகளுக்கு வழங்கிய உபசரிப்பு தொடர்பில் நீதியமைச்சர் அலி சப்ரி, சிங்கப்பூர் அமைச்சர் சண்முகத்துக்கு நன்றியை தெரிவித்துக்கொண்டார் என உயர் தூதரகம் தனது அறிக்கை யில் குறிப்பிட்டுள்ளது.

எது எப்படி இருந்த போதிலும் இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்றதாக அன்றைய எதிர்க்கட்சியாக இருந்த தற்போதைய ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூறிய பிணை முறி மோசடி தொடர்பில், முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரனை இலங்கைக்கு அழைத்து வந்து விசாரணைகளை நடத்தப் போவதாக கூறியிருந்தது. அத்துடன் இந்த பிணை முறி மோசடியுடன் தொடர்புடைய அனைவருக்கும் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டிருந்தது. எனினும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டாண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இந்த விடயம் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அத்துடன் மலேசியாவில் இருந்து கே.பியை கொண்டு வந்தது போல் அர்ஜூன் மகேந்திரனை கொண்டு வரப் போகிறோம் என அன்று எதிர்க்கட்சியில் இருந்து உதய கம்மன்பில கூறி யிருந்தார். இவ்வாறான நிலைமையில், நீதியமைச்சர் அலி சப்றி சிங்கப்பூருக்கு விஜயம் செய்திருந்தும், அவர் அர்ஜூன்மகேந்திரன்தொடர்பில்எவ்விதபேச்சுகளையும் நடத்தாமல் திரும்பியுள்ளார்.

## ஆண் ஒருவரின் சடலம் பளை நகரத்தில் மீட்பு

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பளை நகரப் பகுதியில் ஏ - 9 வீதியிலிருந்து நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பளை நகரப்பகுதிக்கு அருகில் ஏ - 9 வீதியில் ஒருவர் மயங்கிய நிலையில் கிடக்கின்றமையை பொது மக் கள் அவதானித்துள்ளனர்.

உடனடியாக அவசர நோயாளர் அம்புலன்ஸுக்கு அழைப்பு விடுத்து பளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை அந்த நபர் இறந்து பல மணி நேரமாகி விட்டதாக கடமையில் உள்ள வைத்தியர் தெரிவித்துள்ளார்.

இறந்தவர் பளை முல்லையடியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளந்திரையன் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இதேவேளை சடலம் தற் பொழுது பளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளைப் பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வாள்வெட்டுக்கு உள்ளாகி படுகாயமடைந்த அமைச்சர் வீரசேகரவின் பாதுகாப்பு அதிகாரி

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவின் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியாகக் கடமையாற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் வாள்வெட்டு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

படுகாயமடைந்த நிலையில் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் வசித்து வரும் மஹரகம பிரதேசத்தில் உள்ள வீட்டில் இந்த சம்பவம் நடந்துள்ளதாக மகரகம பொலிஸார் கூறியுள்ளனர்.

உதவி பொலிஸ் அத்தியட்சகரை வாளால் வெட்டினார் எனக் கூறப்படும் அவரது மைத்துனர் சம்பவத்தை அடுத்து தப்பிச் சென்றுள்ளார். சம்பவத்தில் படுகாயமடைந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் சிகிச்சை பெற்று வருகிறார். தப்பிச் சென்ற சந்தேக நபரைக் கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## தீயில் எரிந்த பெண்ணின் சடலம் மட்டக்களப்பு வீடொன்றில் மீட்பு

மட்டக்களப்பு - வாகரையிலுள்ள வீடொன்றிலிருந்து தீயில் எரிந்த நிலையில் பெண்ணொருவரின் சடலம் நேற்று (வெள்ளிக்கிழமை) மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாகபுரம், பால்சேனையைச் சேர்ந்த 64 வயதுடைய பூமணஜதேவி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி பெண் சம்பவதினமான வியாழன் இரவு குப்பி விளக்கு ஒன்றை எரிய வைத்து விட்டு அதற்கு அருகில் ஆழ்ந்த நித்திரையில் இருந்த போது குப்பிவிளக்கு தீ அவர் மீது பரவியுள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சடலத்தை பிரேத பரிசோதனைக்கு வைத்தியசாலைக்கு ஒப்படைப்பதற்காக நீதிமன்ற அனுமதியை பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## ரஞ்சனுக்காக ஜெனீவா விஜயம் செய்யும் ஹரின்!

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யும் நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ ஜெனிவாவிற்கு விஜயம் செய்ய உள்ளார்.

நீதிமன்றை அவமரியாதை செய்த குற்றச்சாட்டின் பேரில் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு நான்கரை ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்து கொள்ளும் நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, எதிர்வரும் 28 ஆம் திகதி ஜெனிவாவிற்கு விஜயம் செய்ய உள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் ரஞ்சன் தொடர்பில் முறைப்பாடு ஒன்றை ஹரின் செய்ய உள்ளார்.

ஹரினுடன் அநேகமாக நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்காரவும் இணைந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. ரஞ்சனுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டால் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குவேன் என ஹரின் பகிரங்கமாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டை நோக்கி வருகின்றது மற்றுமொரு எரிபொருள் கப்பல்

தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு எதிர்வரும் சில தினங்களில் குறைவடைந்துவிடும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார். இந்த சந்தர்ப்பத்தில் எரி பொருளின் விலையை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானிக்க வில்லை. 3.5 கோடி அமெரிக்க டொலருக்கும் அதிகமான நிதியை செலவிட்டு, விடுவிக்கப்பட்டுள்ள கப்பலில் 37 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசல் தரையிறக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் சில தினங்களில் மேலும் ஒரு கப்பல் எரிபொருளுடன் நாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## அருந்திக பெர்னாண்டோ வவுனியாவிற்கு விஜயம்





அமைச்சர் விமல் வீரவன்ஸவின் வடமாகாண ஒருங்கிணைப்பு செயலாளர் மற்றும் வன்னி மாவட்ட ஒருங்கிணைப்பு செயலாளர் ஆகியோருடனான நட்பு ரீதியான தனிப்பட்ட விஜயமாக இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ கடந்த வியாழக்கிழமை வவுனியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

இதன்போது வவுனியா - பெரியகட்டில் இயற்கை பசளையில் மேற்கொள்ளப்பட்ட நெற்பயிற் செய்கையை ஊக்குவிக்கும் செயற்பாட்டில் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ ஈடுபட்டார். வவுனியா கோவில் குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு சென்ற அவர் கிராம அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியமையுடன், கோவில்குளம் அகிலாண்டேஸ்வரர் ஆலயத்திற்கும் சென்று வழிபாடு களை மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் விமல் வீரவன்ஸவின் வடமாகாண அணியினருடன் பம்பைமடு, பெரிய கட்டு பகுதிக்குச் சென்ற இராஜாங்க அமைச்சர் சேதன பசளையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட விவசாயிகளை ஊக்குவிக்கும் முகமாக அங்கு இடம்பெற்ற வயல் அறுவடை நிகழ்விலும் கலந்து கொண்டு அறுவடையை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது அந்தப் பகுதி விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

இராஜாங்க அமைச்சருடன், பனை அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் கிறிஸ்சாந்த பத்திராஜா, அமைச்சர் விமல் வீரவன்ஸவின் வடக்கு அணியினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** நடிகர் தனுஷ், ஐஸ்வர்யா விவாகரத்துச் செய்திகள் பரவலாய் வெளிவந்தன. இப்பொழுது அதுபற்றி அதிகம் பேச்சைக் காணோம். அவர்களுக்குள் என்னதான் நடக்கிறதாம்?

**பதில் :-** ரொம்பத்தான முக்கியமான கேள்வி! அவர்கள் விவாகரத்துச் செய்துவிட்டால்.....

* தமிழர்களின் உரிமையைத் தரப் பேரினவாதிகள் சம்மதித்து விடுவார்கள்,

* நம் கூட்டமைப்புத் தலைவர்களுக்குள் ஒற்றுமையும், ஒழுக்கமும் வந்து விடும்,

* கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊரோடு ஒத்து நடக்கத் தொடங்கி விடுவார்,

* இந்திய மீனவர்கள் நம் கடலுக்குள் வந்து மீன்பிடிக்காமல் விட்டுவிடுவார்கள்,

* முன்னாள் முதலமைச்சர் தன்கட்சியை வளர்த்துப் பலம் பெறச் செய்துவிடுவார்,

* நம் அரசாங்கம் பெற்றிருக்கும் கடன்களை எல்லாம் உலக நாடுகள் இரத்துச் செய்துவிடும்,

* ஈழத் தமிழ் வாக்காளர்கள் சரியான தலைவர்களை இனங்கண்டு வாக்களிக்கத் தொடங்கி விடுவார்கள்,


– அவர்களின் விவாகரத்தால் இத்தனை நன்மைகளும் நடக்க இருப்பதால் அதுபற்றி நீங்களும் கவலைப்படாமல் எப்படித்தான் இருப்பதாம்?

நடிகர்களின் பொய்யான வாழ்க்கை பற்றி மெய்யாகக் கவலைப்படும் உங்களை நினைக்கப் பரிதாபமாய் இருக்கிறது. நீங்கள் மட்டும் என்றில்லை. இன்று பலரும் இப்படியான விடயங்களில்தான் மனதைச் செலுத்துகிறார்கள். இவையெல்லாம், தனுஷ், ஐஸ்வர்யா உட்பட ஒருவருக்கும் பயனில்லாத விடயங்கள். இத்தகைய பயனில்லாத விடயங்களைப் பேசுபவனை மனிதன் என்று சொல்லக் கூடாது என்றும், இவர்கள் நெல்லுக்குள் கிடக்கும் 'சப்பிகள்' போல மனிதர்களுக்குள் கிடக்கும் 'சப்பிகள்' என்றும் சொல்கிறார் வள்ளுவர். (பயனில் சொல் பாராட்டுவானை மகன் எனல் மக்கட் பதடி எனல்) நீங்கள் நெல்லாயிருக்கப் போகிறீர்களா? சப்பியாயிருக்கப் போகிறீர்களா?

**உலகநாதரின் ஒப்பீனியன் * வள்ளுவருக்கும் வாரிதியாருக்கும் உலக நடை தெரியேல! ஹி..ஹி..ஹி..**

**2. கேள்வி:-** ரஷ்யா தன் மக்கள் அங்கு வாழ்கிறார்கள் என்கின்ற உரிமையைக்காட்டி, அங்குள்ள புரட்சியாளர்களை அங்கீகரித்து, அவர்கள் வாழும் இரு பகுதிகளைத் தனிநாடுகளாய் அங்கீகரித்துள்ளதோடு, அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவெனத் தனது படையை அமைதிப்படையாய் உக்ரையினுக்குள் நுழைத்திருக்கிறதே பார்த்தீர்களா?

**பதில் :-** 'புடின்' நேட்டோ நாடுகளின்



கண்களில் விரலைவிட்டு ஆட்டுகிறார். அமெரிக்கா செய்வதறியாது விழிபிதுங்கி நிற்கிறது. சமாதானப்படை என்ற பெயரில் உக்ரையினுக்குள் தனது படையினரை அனுப்பித் தனது நோக்கத்தை நிறைவேற்றி உள்ளதோடு மற்றவர்களை வாயடைக்கும்படியாகவும் செய்திருக்கிறார் அவர். நேட்டோ நாடுகள் எதிர்பார்க்காத 'புட்டினின்' சமயோசித நகர்வு இது. ஒரு வகையாய் உக்ரையினுக்குள் நுழைந்தாகிவிட்டது. வெறுமனே தனது படையை நுழைத்திருந்தால் ரஷ்யா உக்ரையினின் இறையாண்மைக்குள் தலையிட்டுவிட்டது எனச் சொல்லி அமெரிக்காவும் நட்பு நாடுகளும் அதனைத் தாக்கி இருக்கமுடியும். அப்படியில்லாமல் அங்குள்ள தன் இனத்தாரின் உரிமைப் போராட்டத்தை அங்கீகரித்து உள்நுழைந்திருப்பதால், ஏதும் செய்யமுடியாமல் 'நேட்டோ' நாடுகள் சங்கடப்பட்டு நிற்கின்றன. தனக்குப் பிடிக்காத பலநாடுகளுக்குள் புரட்சியாளர்களை உருவாக்கி அவர்களை அங்கீகரித்து அது உள்நுழைந்து அந் நாடுகளைக் கபளீகரம் செய்த அமெரிக்கா, இப்பொழுது ரஷ்யாவின் திட்டத்தை மறுக்கமுடியாமலும் ஏற்கமுடியாமலும் 'திருடனுக்குத் தேள் கொட்டினாற்போல்' நிற்கிறது.

தனக்கு உரிமையுள்ள இனத்தார் வாழும் நாடுகளுக்குள், அவர்களை அங்கீகரிக்கும் வகையில் உள்நுழைந்து அந் நாட்டின் இறையாண்மைக்குள் கைவைக்கும் உரிமையை ரஷ்யா தெளிவாய் முன்மொழிந்திருக்கிறது. இதனை எந்தெந்த நாடுகள் வழிமொழியப் போகின்றனவோ? நம் நாட்டின் பேரினவாதிகளுக்கும் இது வயிற்றைக் கலக்கும் செய்திதான்!

முன்பு சொன்னதையே மீண்டும் சொல்கிறேன். 'நேட்டோ' நாடுகள் தமது நோக்கத்தின் தோல்வியை ஒத்துக்கொண்டு, பெயருக்கு ரஷ்யாவின் மேல் பொருளாதாரத் தடைகளை விதித்து, 'விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்றாற் போல் இருக்க வேண்டியதுதான். அல்லது உக்ரையினுக்குள் ரஷ்யா நீட்டியிருக்கும் கூரிய மூக்கைத் தொடப்போய், உலகப் போரை வருவிக்க வேண்டியதுதான். தற்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் ரஷ்யா, உக்ரையின் இழுபறி, கிரிக்கட், புட்போல், டெனிஸ் விளையாட்டுக்களையெல்லாம் பின்தள்ளிப் பார்வையாளர்களை 'டென்ஷனின்' உச்சத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியார் இலக்கியவாதியா? அரசியல் ஆய்வாளரா? 'ஒன்னுமே புரியலே உலகத்திலே'**

**3. கேள்வி:-** முன்பு ஒருமுறை 'மரபுக் கவிதைகள்' என்ற நாடகத்தை வாசகர்களுக்குச் சிபாரிசு செய்து பார்க்கச் சொல்லியிருந்தீர்கள். மிக அற்புதமான நாடகமாய் அது இருந்தது. அது போல வேறேதேனும் நாடகம் இருந்தால் சொல்லுங்களேன்?

**பதில் :-** நல்ல நாடகங்களைப் பார்க்க விரும்பும் உங்களைப் போன்றவர்களுக்காக இன்னுமொரு நாடகத்தையும் சிபாரிசு செய்யத் தோன்றுகிறது. அதனையும் அண்மையில்தான் YouTube இல் பார்த்து வியந்தேன். முன்பு நான் சொன்ன 'மரபுக் கவிதைகள்' நாடகம், முற்றுமுழுதாக கோயம்புத்தூர் பாஷையையும், ஊர் வழக்கையும் அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டிருந்தது. இப்போது நான் சொல்



லும் 'ஆனந்தபவன்' எனும் இந்தநாடகம் முழுக்கமுழுக்கத் தமிழ்நாட்டுப் பிராமண பாஷையையும் அவர்களின் வாழ்க்கை முறைமைகளையும் அடிப்படையாய் வைத்து மிக அழகாக எடுக்கப்பட்டிருக் கிறது. இது 'ஆனந்தவிகடனில்' வெளியீடான நாடகம்.

ஐந்து பெண்களுடன் பிறந்த பாசமிக்க சகோதரன் ஒருவனைக் கதாநாயகனாகக் கொண்டு இக் கதை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வீட்டின் ஐந்து பெண்களும் ஐந்துவித குணச்சித்திரங்கள். ஒன்றுக்கும் உதவாத வீட்டின் மூத்த மாப்பிள்ளை குடும்பத்தை ஆட்டிப் படைக்கிறார். மூத்த மாப்பிள்ளை என்பதால் அவரைத் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடும் மாமியார். கதாநாயகன் காதலித்து அழைத்துவரும் குணவதியான மருமகள். மகள்மாரைத் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடும் தாய், மருமகளை வேண்டுமென்றே வெறுக்கிறாள். மனைவியின் சொல்லை மறுக்க முடியாமலும், மூத்த மருமகனை வெறுக்க முடியாமலும், மகள்மாரைத் துறக்க முடியாமலும், அன்பு மகனின் துன்பத்தைப் பொறுக்க முடியாமலும் தத்தளிக்கும் வீட்டுத்தலைவரான தந்தை, ஆளுக்கொரு குண இயல்புடன் சித்திரிக்கப்பட்டிருக்கும் ஐந்து பெண்களும், அப்பெண்களின் கணவன்மார்களாக வரும் வேறுபட்ட பாத்திரங்களும், அப்பாத்திரங்களின் குடும்பத்தவர்களும் காந்தம் போல் நம்மை ஈர்த்துக் கொள்கிறார்கள். இவர்கள் தவிர, அந்த வீட்டில் 'டேரா' போட்டிருக்கும் தாயின் சகோதரனான நாரதக் கிழவன் ஒருவர் வேறு. இப்படியாய் அற்புதமான பாத்திரங்களை வைத்து அறுசுவை உணவு படைத்திருக்கிறார் நாடகத்தின் டைரக்டர்.

ஒன்றின் சாயல் மற்றொன்றில் கொஞ்சம்கூட வராமல் முழுக்கமுழுக்கப் பாத்திரங்களை வேறுபடுத்தி வடிவமைத்திருக்கும் விதம் வியப்பின் உச்சத்திற்கு நம்மைக் கொண்டு செல்கின்றது. வீட்டு மாப்பிள்ளையாக வரும் நம்மால் அறியப்பட்ட நடிகர் பாஸ்கரின் நடிப்பும், அந்த நாரதக் கிழவரின் நடிப்பும் வீட்டுத் தலைவராக வரும் நடிகர் டெல்லிகுமாரின் சிறு 'பிசிறு' கூட இல்லாத பாத்திரத்துடன் ஒன்றிய நடிப்பும் நெஞ்சை அள்ளுகின்றன.

இதுநாள்வரை வெறும் நகைச்சுவை நடிகையாக நாம் பார்த்த நடிகை 'சச்சு' பாசமுள்ள தாயாகவும், பாசமில்லாத மாமியாராகவும் இரட்டைநிலை எடுத்து வெளுத்து வாங்குகிறார். குடும்பத்தாரால் தரப்படும் பிரச்சினைகளை விழுங்கி நிதானம் தவறாமல் செயற்படும் கதாநாயகனும், கதாநாயகியும் இன்றைய இளையோர்க்குக் குடும்ப ஒற்றுமைக்கான முன் உதாரணர்களாய் வலம் வருகிறார்கள்.

நாடகத்தின் ஒவ்வொரு 'எப்பிசோட்டும்' அடுத்த 'எபிசோட்டு'க்காக எம்மை ஏங்க வைக்கின்றன. எங்களையும் அந்தப் பிராமணக் குடும்பத்தின் ஒரு அங்கமாக மாற்றும் வித்தையைக் கதாசிரியரும் டைரக்டரும் செய்திருக்கிறார்கள். 'மரபுக் கவிதை'க்கும், 'ஆனந்தபவனு'க்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான். மரபுக் கவிதையின் முடிவு நாடகத்தின் தரத்தை மிகவும் உயர்த்தியது.

(12ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# விடுதலைப் புலிகளின் மீதான தடையை இந்தியா மறுபரிசீலனை செய்யவேண்டும்!

## ஜனநாயக போராளிகள் கட்சியின் பொதுச்செயலாளர் கதிர் கோரிக்கை

விடுதலைப் புலிகள் அமைப்பினர் மீது விதித்துள்ள தடையை இந்தியா மறுபரிசீலனை செய்ய வேண்டும் என ஜனநாயக போராளிகள் கட்சியின் பொதுச்செயலாளர் இ.கதிர் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

விடுதலைப் புலிகளின் தனிநாட்டுக்கான போராட்டம் என்பது மாற்றப்பட்டு தற்போது ஜனநாயக வழிக்கு திரும்பியுள்ளது. இந்நிலையில் விடுதலைப் புலிகள் மீது தடைகளை இந்தியா தொடர்ந்து வைத்திருப்பது நல்லதல்ல. அந்தத் தடையை இந்தியா நீக்கவேண்டும் அப்போதுதான் ஏனைய நாடுகளும் அந்தத் தடையை நீக்குவதற்கான முனைப்புக்களில் ஈடுபடும்.

நடைபெறவிருக்கின்ற மனித உரிமைகளுக்கான மாநாட்டில் இந்தியா காத்திரமான முடிவுகளை எடுக்க வேண்டும். இந்தியாவின் தேசிய நலனோடு ஈழத்தமிழர்கள் அக்கறையாக செயற்படுகின்றோம். அந்த வகையில் இலங்கைத் தமிழர்கள் தேசிய நலன்சார்ந்த விடயத்திலும் இந்தியா உண்மையாகவும் அக்கறையுடனும் செயற்பட வேண்டும்.

அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, விடுதலைப் புலிகளின் தலைவர் தொடர்பாக பொய்யான கருத்தைக் கூறி இருக்கின்றார். உண்மையில் தலைவருடன் நெருக்கமாக இருந்த போராளிகளில் நானும் ஒருவன். விடுதலைப் புலிகளின் தலைவர் தொடர்பாக இவ்வாறான குற்றச்சாட்டுக்களை வைத்திருப்பவர்கள் யாராக இருந்தாலும் எதிர்காலத்தில் பாரதூரமான




விளைவுகளை சந்திக்க நேரிடும். – என்றார்.

## அரசியல் அறிவியல் கருத்தரங்கு நாளை

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஈழச்செய்தி இணையத்தளம் நடத்தும் அரசியல் அறிவியல் கருத்தரங்கு நாளை (ஞாயிற்றுக்கிழமை) இலங்கை நேரப்படி மாலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியல் உயர்பீட உறுப்பினர் க.தேவராஜாவின் நிகழ்ச்சித் தொகுப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் 'தமிழர் தரப்பின் கோரிக்கையை இந்தியா எவ்வாறு அணுகும்' என்னும் தலைப்பில் சிரேஷ்ட ஊடகவியலாளர் வடிவேல் தேவராஜும், 'கடிதத்தைத் தொடர்ந்து தமிழர் தரப்பின் அடுத்தகட்ட நகர்வு என்ன?' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறைப் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கமும் வழங்குவர்.

**Meeting ID - 87946110831**
**Pass Code - 736820**

## திருமலை சனீஸ்வரனை வழிபட்டார் வாசுதேவ!



திருகோணமலை மாவட்டத்தில் நீர்வழங்கல் தொடர்பிலான விசேட கலந்துரையாடலொன்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலுக்கு வருகை தந்த நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார திருகோணமலை சனீஸ்வரர் தேவாலயத்துக்கு விஜயம் மேற்கொண்டு பூஜை வழிபாட்டிலும் கலந்து கொண்டார். திருகோணமலை பத்திரகாளியம்மன் ஆலயத்தின் பிரதம குரு ரவிச்சந்திர குருக்களது தலைமையில் இந்தப் பூஜை வழிபாடு இடம்பெற்றது.

இடதுசாரி முன்னணியின் தலைவர் ஒருவர் இலங்கையில் அமையப்பெற்ற ஒரே ஒரு கோவிலான சனீஸ்வரர் தேவாலயத்தில் விசேட வழிபாடுகளில் கலந்துகொண்டமை சிறப்பம்சமாகும்.

இந்த வழிபாடுகளில் நீர்வழங்கல் அமைச்சின் திருகோணமலை இணைப்புச் செயலாளர் பீ.குணசாந்தன், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிரதித் தலைவர் ஜீ.வீ.டி. திலகரத்ன மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குள் குப்பைகளை கொட்டினால் சட்ட நடவடிக்கை

### தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி அறிவிப்பு



வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குள் வெளி இடங்களிலிருந்தும் உள்ளூரின் சில நபர்களாலும் பொது இடங்கள் மற்றும் வீதிகளில் கொண்டுவந்து கொட்டப்படும் குப்பைகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு வேலணை பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக தவிசாளர் நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி அறிவித்துள்ளார்.

வேலணை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த வியாழக்கிழமை தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதன்போது சுற்றுச் சூழல் சுகாதார விடயங்கள் தொடர்பில் உறுப்பினர்களால் சபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இந்நிலையிலேயே தவிசாளர் இவ்வாறு அறிவித்திருந்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

வேலணை பிரதேசத்தில் வாழும் மக்கள் நாளாந்தம் அகற்றும் குப்பைகள் மற்றும் கழிவுகளை எமது சபையின் சுகாதாரப் பிரிவினர் தரம்பிரித்து அகற்றுவதில் முடியுமானவரை சிறப்பான நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

இதேநேரம் பல பகுதிகளில் வெளியார் அல்லது வெளி பிரதேசங்களில் இருந்து குப்பைகள் மற்றும் தரக்குறைவான கழிவுகளைக் கொண்டுவந்து வீதிகளிலும் பொது இடங்களிலும் இரகசியமான முறையில் கொட்டிவிட்டுச் செல்கின்றனர் என முறைப்பாடு கிடைத்துள்ளதுடன் அவற்றை அவதானித்தும் உள்ளோம்.

அந்தவகையில் அவ்வாறு குப்பைகளைக் கொண்டு வந்து கொட்டும் நபர்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் எமது பிரதேச சபையால் பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் அவ்வாறு கொண்டுவந்து குப்பைளைக் கொட்டும் நபர்கள் இனங்காணப்படும் சந்தர்ப்பத்தில் அவர்களைப் பிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறான செயற்பாடுகளை எவரும் எமது பகுதிக்குள் மேற்கொள்ள வேண்டாம் என்ற அறிவுறுத்தியுள்ள தவிசாளர் அதனைக் கட்டுப்படுத்த சபையின் ஆதரவுடன் பொதுமக்களின் ஆதரவையும் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசின் திட்டமிட்ட நில அபகரிப்பைத் தடுப்பதற்கான பொறிமுறையை உருவாக்குவதற்கான கலந்துரையாடல்

அரசின் நில அபகரிப்பு செயற்பாடுகளுக்கு எதிராக ஒரு கூட்டுப்பொறிமுறையை உருவாக்குவது தொடர்பான கருத்துப் பகிர்வும் ஆலோசனைக் கூட்டமும் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) மாலை 2 மணிக்கு மட்டக்களப்பு பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தமர்வு தொடர்பாகத் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் ஓர் ஊடக அறிக்கையையும் வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

நிலமே இன இருப்பின் அடிப்படை. அதுவே எம் வரலாற்றின் குறிகாட்டி. நிலமிழந்தால் இன இருப்பு கேள்விக் குறியே. ஆகவே, அரசாங்கம் நன்கு திட்டமிட்ட வகையில் தொலைநோக்கு சிந்தையுடன் பௌத்த மயமாக்கல் நிகழ்ச்சி நிரலை மிகத் தந்திரமான நுட்பங்களை உபயோகித்து காலத்துக்குக் காலம் செயற்படுத்தி வருகிறது.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் புதிய புதிய வரலாறுகளை எல்லாம் கற்பிதம் செய்து அரச திணைக்களங்களைக் கொண்டே எமது வளம்மிக்க பிரதேசத்தை அரசு அபகரித்து வருவது யாவரும் அறிந்ததே.

எனவே, கடந்த காலத்தில் நில அபகரிப்பைத் தடுப்பதற்கு பல்வேறு விதமான போராட்டங்கள் தமிழர் தரப்பில் பலரால் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆகவே, நில அபகரிப்பைத் தடுப்பதற்கு ஒரு கூட்டுப் பொறிமுறையை உருவாக்குவதற்கு அரசியல் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், கருத்தியலாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடி ஒரு முறைமையை உருவாக்க எண்ணுகிறோம்.

எனவே இந்தச் செயன்முறைக்கு தமிழின இருப்பில் அக்கறையும் பொறுப்பும் உள்ள தங்களின் ஆளுமைமிக்க ஆக்கபூர்வமான ஆலோசனைக்காக தங்களை அன்புடன் அழைக்கின்றோம். – என்றுள்ளது.

## தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் அரசியல் கருத்துப்பகிர்வு மட்டக்களப்பில்

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாநகரில் 'அதிகாரப் பகிர்வில் 13 ஆம் திருத்தத்தின் நோக்கு நிலை' எனும் கருப்பொருளிலான கருத்துப் பகிர்வு மட்டக்களப்பு மாவட்டத்தில் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு இடம்பெற உள்ளது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத் தலைவர் வி.எஸ்.சிவகரனின் நெறியாள்கையில் நடைபெறும் இந்த நிகழ்வில், 'தமிழ் பேசும் மக்களின் ஐக்கியமும் அதிகாரப் பகிர்வும்' என்னும் தலைப்பில் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாவும், 'இராஜதந்திர நோக்கு நிலையில் தமிழர் அரசியல்' என்னும் பொருளில் யதீந்திராவும், 'கிழக்கு மக்களின் இருப்பும் அரசியல் அணுகுமுறையும்' என்றும் கருத்தில் த.வசந்தராசாவும், 'அறிவார்ந்த சமூகமும் அரசியல் இருப்பும்' என்னும் நோக்கில் வா.குணாளனும் கருத்துரைகளை வழங்குவர்.

இவர்களின் கருத்துரைகளுக்குத் தெளிவூட்டும் வகையில் அரசியலாளர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமாகிய எம்.ஏ.சுமந்திரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் ஆகியோர் வழங்குவர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் - 292

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**735.மனித உரிமை மீறல்கள், சுய நிர்ணயம், போர்க்குற்றங்கள் போன்ற பிரச்சினைகள் ஐ.நாவின் முன் வரும் என ராஜபக்ஷக்கள் கணித்தே செயல்பட்டுப் போரை நடத்தினார்கள்,அழிவுகளை பற்றி அக்கறை கொள்ளவில்லை என்றால், அது எப்படிச் சாத்தியம்?**

ஐக்கிய நாடுகள் சபையால், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான




சர்வதேச சாசனம் (International Covenant on Civil and Political Rights) ஆக்கப்பட்டுள்ளது. இந்த சாசனம் தனி மனிதனதும் மனிதக்குழுக்களினதும், குடியுரிமை, அரசியல் உரிமைகளை எடுத்து கூறி அவற்றை எல்லா அங்கத்துவ நாடுகளும் ஏற்று, மதித்து அமுலாக்க வேண்டுமென பரிந்துரை செய்கின்றது. ஒரு நாடு அதனை ஏற்று அமுலாக்கா விட்டால், மற்ற அங்கத்துவ நாடுகள் அதனைக் கேள்விகளுக்கு உட்படுத்தலாம்.

சில அங்கத்துவ நாடுகள் அந்த சாசனத்தை தங்களது குடியியல் யாப்புகளில் அங்கமாக்கியிருக்கின்றார்கள். வேறு சில அதனை அப்படியே தங்களது நாட்டின் சட்டமாக – சர்வதேசச் சட்டமாக – இணைத்துள்ளார்கள்.

ராஜபக்ஷ அரசின் அமைச்சர் ஜி.எல். பீரிஸ், சட்டவாளர். 2007ஆம் ஆண்டு, ஒரு சட்டத்தை நாடாளுமன்றத்தின் முன் வைத்து நிறைவேற்றினார். அது ஐ.நாவின் சிவில் மற்றும் அரசியல் உரிமையாளுக்கான சர்வதேச சாசனம். அந்த சாசனத்தில் ஒரு நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது பிரதானமாக உள்ளடக்கமாகும். ஆனால் சட்டவாளர் தான் முன்மொழிந்த சர்வதேச சிவில் மற்றும் அரசியல் சாசன சட்டத்தில் சுயநிர்ணய உரிமை சார்ந்த எல்லாவற்றையும் நீக்கி, ஒற்றையாட்சியைப் பலப்படுத்தி, சுயநிர்ணயம் பற்றி பேசிய எல்லாச் சரத்துக்களையும், வழிமுறையையும் இல்லாதொழித்தே நிறைவேற்றினார். இந்தச் சட்டம், சுயநிர்ணய உரிமை நீக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபொழுது கூட்டமைப்பின் அங்கத்தினர் எவரும் அதனைப் பற்றி பேசவில்லை. ஆனால் பொது வெளியில் சுயநிர்ணயமே இன்று வரை கோஷமாகவுள்ளது. அது போலவே அவர்கள், நல்லாட்சி அரசு, 2015இல் சர்வதேசத்துடன் இணைந்து மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் பற்றிய தீர்மானம் 30/1க்கு ஆதரவு தந்தபோது கூட்டமைப்பினரோ மற்றவர்களோ, சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சாசனம் சுயநிர்ணய உரிமைகளை உள்ளடக்கியதாக வேண்டும் என்று கோரவில்லை. இவற்றை சர்வதேசம் கூட ஸ்ரீலங்கா ஓர் அங்கத்துவ நாடாக ஏன் சுயநிர்ணய சரத்தை நீக்கியது என்று கேட்கவில்லை. ஆனால் தமிழ் மக்களது சமர்ப்பணங்கள் எல்லாமே நாட்டின் சட்டத்திலில்லாத சுயநிர்ணயத்தை நோக்கித்தான் செய்யப்படுகின்றது. ஆனால் ராஜபக்ஷக்களோ பிரிவினைக் கோரிக்கையைத் தடுக்கும் அரசமைப்பின் 6ஆம் திருத்தம் போல் சுயநிர்ணயம், அரசமைப்புச் சட்டத்திலோ, நாட்டின் பிற சட்டங்களிலோ இல்லை என்றும், தமிழ் மக்கள் அவை பற்றி பேசக் கூடாது என்றும் வாதிக்கின்கிறனர்.

**736.அவர்களா உள்ளக சுயநிர்**




**ணயம் பற்றி பேசப்போகின்றார்கள், அதற்கு பின் வெளியக சுயநிர்ணயத்தை பற்றி பேசுவோம் என்று வெருட்டுதல்கள் தர?**

நல்லாட்சிக் காலத்தில் ரணில் வரைந்த நகல் யாப்பில் கூட சுயநிர்ணயத்தை உள்ளடக்கி, சர்வதேச சிவில் மற்றும் அரசியல் சாசனம் இணைக்கப்படவில்லை.



ஆனால் பௌத்த சமயத்துக்கு முன்னுரிமை தர தமிழ்க் கூட்டமைப்பு ஒத்துக் கொண்டுள்ளதாகவும், ஒற்றையாட்சி அடிப்படையில் நல்லிணக்கம் இருக்கும் என்றும் கூறப்பட்டது. சர்வதேச சட்டத்தின் படி சுயநிர்ணய உரிமை உள்வாங்கப்பட்டிருந்தால், ஒற்றையாட்சிக்குள் எல்லா சிறுபான்மை சமூகங்களும் அடங்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் இருந்திருக்கா.

ராஜபக்ஷக்கள் ஐ.நாவின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சாசனத்தைத் துண்டாடி, சுயநிர்ணய உரிமையை இல்லாது சட்டமாக உள்வாங்கியமையையும், ரணில் விக்கிரமசிங்கவின் நல்லாட்சிக் கால அரசமைப்பு வரைவிலும் அதை ஏற்றுக் கொள்ளாது, சிறுபான்மையைத் தள்ளி, ஒற்றை ஆட்சியை நிலைநிறுத்தியதையும் மனித உரிமை மன்றுக்கோ, சர்வதேசத்துக்கோ முறைப்படாமல் சம்பந்தனும், சுமந்திரனும், ரணிலின் மேலிருந்த அபரித நம்பிக்கையால், ஒற்றையாட்சிக்குள் ஒரு வித சமஷ்டி இருக்கின்றது என்று பீற்றி, அவை பற்றி கேள்விகள் கேட்டோருக்கு அதை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை, நடைமுறையில் தெரியும் என்றார்கள்.

ஆனாலும், 13ஆம் திருத்தத்தின் சரத்துக்களையும், மாகாண சபைகளில் வெளிப்படையான அதிகாரங்களையும் அறிந்து, அவை கையளிக்கும் முறை




மைகளை மாற்றி அமுல்படுத்தும்படி, போர் முடிந்த பின்னும், இந்தியாவிடம் கூட்டமைப்பு கேட்கவில்லை. அந்த அரசியலுக்கு அவர்கள்தான் விளக்கம் தரவேண்டும்.

இதேபோல் “ஒரு நாடு; ஒரே சட்டம்” என்ற அடிப்படையில் புதிய அரசமைப்புச் சட்டம் வந்து, மாகாண சபைகளை இல்லாமல் ஆக்கினால், டக்ளஸ் தேவானந்தா போன்றோர் கிராம மாவட்ட சபைகள் இணைந்து மாநிலமாக, தங்களது பகுதிகளின் வாழ்வாதாரங்களை அபிவிருத்தி செய்ய அதிகாரங்கள் உண்டு எனச் சடையலாம். இரண்டுமே அரசியல் தான்.

“நன்றும் தீதும் பிறர்தர வரா” என்று வாக்கு ஒன்று உண்டு. உயர்வையும் தாழ்வையும் தாங்களே தங்களுக்கு ஏற்படுத்தி கொண்டிருக்கின்றார்கள். புத்தி நிலையை சரியாக எடைபோட்டு சாமர்த்தியத்துடன் நடந்திருந்தால் இன்றிருக்கும் நிலைமையைத் தமிழ் மக்கள் தவிர்த்திருக்கலாம்.

சிங்களப் பேரினவாதத்தை அறிந்தும், புரிந்தும் கூட, தமிழ் மக்களின் தலைவர்கள் ஒவ்வொரு அரசமைப்பு உருவாக்க தருணங்களிலும், சமஷ்டி என்றும், பின் ‘ஒரு நாடு; இரு தேசம்’ எனவும் தாங்கள் நினைத்தவற்றைச் சமர்ப்பணங்களில் வைத்தார்களே



ஒழிய, இவை இந்த பேரினவாதத்துடன் சாத்தியமாகுமா என்று எண்ணி மாற்று வழிகளைச் சிந்திக்கவில்லை. அதே வழியில், கோட்டாபயவின் திட்டங்களை அறிந்தும், திரும்பவும் அதே சமர்ப்பணங்களை வைத்தும், ஒற்றையாட்சியைப் பலப்படுத்த வேண்டும் என்ற அறிவுரைகளே புதிய அரசமைப்புக்கான அறிக்கையில் தரப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் இப்படியாக அவர்களுக்காக நடத்தப்படும் அரசியலோடு வாழ்கின்றார்கள். அதுதான் பரிதாபம்.

– வளரும் –

# மெல்பன் சுந்தரமூர்த்தியின் வாழ்வும் பணிகளும் இன்று Dare to Differ நூல் வெளியீடு




சமூகப்பணிகளில் ஈடுபடுவதற்கு மூலதனமாக இருப்பது பொறுமை, சகிப்புத்தன்மை, தியாக மனப்பான்மை, நெகிழ்ச்சியான இயல்புகள், அர்ப்பணிப்பு, இரக்க சிந்தனை. அவ்வாறு சமூகப்பணிகளில் ஈடுபடும் ஒருவர் தனக்கும் அரசியலுக்கும் வெகுதூரம் என்று சொல்லி ஒதுங்கிச் செல்லவும் முடியாது. அவ்வாறு எதிலிருந்தும் ஒதுங்காமல் தனக்குச்சரியெனப்பட்டதை, அந்தந்தக் காலங்களுக்கு ஏற்ப துணிந்து சொல்லிச் செயற்பட்டவர்தான் ஆஸ்திரேலியா மெல்பனில் நான்கு தசாப்த காலமாக ( 48 வருடங்கள் ) வதியும் சபாரத்தினம் சுந்தரமூர்த்தி. இவரை நாம் சுந்தர் எனச்செல்லமாக அழைப்பது வழக்கம். இலங்கையில் காரைநகர்



களபூமியில் 31.05.1948 ஆம் திகதி பிறந்திருக்கும் சுந்தர், தனது ஆரம்ப – இடைநிலைக்கல்வியை கொழும்பில் பம்பலப்பிட்டி, இரத்மலானை இந்துக்கல்லூரிகளில் நிறைவுசெய்துகொண்டு, Times Of Ceylon நிறுவனத்தில் தொழில் ரீதியாக இணைந்துகொண்டவர்.

தனது 23 வயதிலேயே சாம்பியா நாட்டில் அச்சக நிறுவனம் ஒன்றில் தனக்குப்பிடித்தமான பயிற்சியை மேற்கொண்டுதேர்ச்சிபெற்று தாயகம் திரும்பினார்.

1974 இல் ஆஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்து வந்து, சொந்தமாகவே ஒரு அச்சுக்கூடத்தை தொடங்கியவர். இவ்வாறு அந்நிய நாட்டில் தனக்குத்தெரிந்த தொழிலை முதல் கட்டத்திலேயே தொடங்குவதற்கு சற்று துணிவும் தன்னம்பிக்கையும் வேண்டும்.

குறிப்பிட்ட தொழில் துறையில் தாயகத்தில் ஈடுபட்டவர்களுக்கு புகலிடத்தில் தொடக்கத்தில் அதே துறையில் வேலைவாய்ப்புகள் கிடைப்பது அரிது. இலங்கையில் இவர் வாழ்ந்த காலத்தில் தலைநகரில் மூவின மக்களும் செறிந்து வாழும் பிரதேசத்தில் பெற்ற அனுபவங்களும் புகலிட நாட்டில் தன்னை ஸ்திரப்படுத்திக்கொள்ள மூலதனமாக இருந்திருக்கவேண்டும்.

மனிதர்களுக்கு தொழில் தொடர்பான தேர்ச்சி எவ்வளவுக்கு எவ்வளவு அவசியமோ, அதேயளவு சமூகரீதியான மக்கள் தொடர்பாடல் தேர்ச்சியும் அவசியம்தான். இந்த இரண்டு வகைத் தேர்ச்சிகளும் ஒருவகையில் கலைதான். இக் கலைகளிலும் தேர்ந்தவர்தான் சுந்தர்.

இலங்கையில் காலத்துக்கு காலம் தோன்றிய இனநெருக்கடிகள், இன ரீதியான அச்சுறுத்தல்கள், கல்வியில் ஏற்படுத்தப்பட்ட தரப்படுத்தல், இனப்பாகுபாடுகள் என்பவற்றை ஒரு பிரஜையாக அவதானித்து வந்திருக்கும் சுந்தர், புகலிடம் வந்தபின்னரும் தாயகம் குறித்த சிந்தனைவயப்பட்டவராகவே விளங்கியவர்.

தன்னாலும் தனது தாயகத்துக்கும் தமது இனத்துக்கும் ஏதும் ஆக்கபூர்வமாகச்செய்யவேண்டும் என்ற கனவுகளுடன் புகலிட வாழ்வை அமைதியாக ஆரம்பித்தவர்.

பெரும்பாலானவர்கள், வெளிநாடுகளுக்கு வந்தும் தானுண்டு தன்பாடுண்டு, தனது குடும்பம் உண்டென்ற மனப்போக்குடன் பொதுவாழ்வை நெருங்கமாட்டார்கள். ஒரு வட்டத்திற்குள்ளேயே தம்மை வரையறுத்துக் கொள்வார்கள். பொதுவாழ்வில் கண்டனங்கள், விமர்சனங்களை எதிர்கொள்ளத் திராணியற்றவர்களாகவும், எமக்கு ஏன் வம்பு என ஒதுங்கியிருப்பவர்களாகவும் பலரை சமூக வாழ்வில் பார்த்திருப்போம்!

ஆனால், சமூக ரீதியாகச் சிந்திப்பவர்கள் எப்பொழுதும் பொதுநோக்கத்துடனேயே செயற்படுபவர்கள், மக்கள் மத்தியில் Activist ஆக இனம் காணப்படுவார்கள். சுந்தரமூர்த்தி அவர்களும் மெல்பனில் சமூகப்பணியாளராக அடையாளம் பெற்றவர்.

நாம் வசிக்கும் விக்ரோரியா மாநிலத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழ்ச் சங்கத்தில் 1981 ஆம் ஆண்டில் இணைந்திருக்கும் சுந்தர், இந்தச் சங்கத்தின் சமூக, கலை, கலாசார, கல்விப்பணிகளிலும் தீவிரமாக ஈடுபட்டு சங்கத்தின் தலைமைப்பீடம் உட்பட இதர உறுப்பினர்களின் நன்மதிப்பையும் பெற்றார்.

1983 இல் இலங்கையில் இனக்கலவரத்தின் பின்னர், தமிழ்மக்கள் அகதிகளாக இந்தியாவுக்கும், வெளிநாடுகளுக்கும் புலம்பெயர்ந்த வேளையில், இந்த மக்களின் எதிர்காலம் தொடர்பான அக்கறையில் விக்ரோரியா இலங்கை தமிழ்ச்சங்கம் தீவிரம் காண்பித்த காலகட்டத்தில் ஆஸ்திரேலியா அரசமட்டத்தில் நடந்த பேச்சுகளிலும் சுந்தர் இடம்பெற்றிருந்தார்.

அத்துடன் இலங்கையில் 1983 இல் நடந்த இனக் கலவரத்தைக் கண்டித்து மெல்பனிலும் ஆஸ்திரேலியாவில் இதர மாநிலங்களிலும் நிகழ்ந்த கவனவீர்ப்பு நிகழ்வுகள் கூட்டங்களிலெல்லாம் சுந்தரும் கலந்துகொண்டார்.

ஆஸ்திரேலியாவுக்கு இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வரத்தொடங்கியதும், அமைப்பு ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் பலரது தஞ்சக்கோரிக்கைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தி வந்திருக்கும் சுந்தர், இலங்கைத் தமிழ்ச் சங்கத்தின் செய்தி ஏடான தென்துருவ தமிழ்முரசு இதழின் ஆசிரியராகவும் இயங்கினார். இவரது அச்சகத்திலிருந்தே இந்த இதழும், சங்கத்தின் பிரசுரங்களும் வெளி வந்தன.

இலங்கையில் இந்திய அமைதிப்படையின் பிரவேசத்திற்குப் பின்னரும், அதன் வெளியேற்றத்தின்போதும், அதனைத்தொடர்ந்து, மீண்டும் இலங்கை இராணுவத்தின் ஆக்கிரமிப்புகள் அதிகரித்தவேளைகளிலும் புகலிட தமிழ் அமைப்புகள் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார விடயங்களிலும் கவனம் செலுத்தியதை அறிவோம்.

அவ்வாறு தொடங்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தில் 1994 ஆம் ஆண்டில் இணைந்துகொண்ட சுந்தர், அதன்பொருட்டு நடத்தப்பட்ட நிதி சேகரிப்பு கலாசார நிகழ்ச்சிகளிலும் முன்னின்று உழைத்தார். அத்துடன் தமிழ் ஈழ பொருளாதார மேம்பாட்டு அமைப்பிலும் Tamil Elam Economic Development Organisation (TEEDOR) சுந்தரின் பங்களிப்பு முக்கியமானது.

இந்தத் தொண்டு நிறுவனங்களின் வாழ்வாதார உதவிகளை இலங்கையில் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக வழங்குவதற்கும் சுந்தர், பல தடவை இலங்கைக்குப் பயணங்களை மேற்கொண்டார். ஏ – 9 பாதை மூடப்பட்டிருந்த கால கட்டத்தில் உயிரையும் பணயம் வைத்து கிளாலி கடல் ஏரி மார்க்கமாகவும் நிவாரண உதவிகளை கொண்டு சேர்ப்பித்த இவரது துணிவும் முன்னுதாரணமானது.

இவ்வாறு தாயகத்தில் போரில் பாதிக்கப்பட்டவர்களிடத்தில் மனிதநேயப்பண்புகளுடன் செயற்பட்டிருக்கும் சுந்தருக்கு 2009 ஆண்டு மே மாதம் நடந்த இறுதிப்போரின் முடிவுகள் ஆழ்ந்த வேதனைகளைத்தந்திருந்தன. அதனால் எம்மவர் மத்தியில் விரக்தி நிலைக்கு தள்ளப்பட்ட பலரை பார்த்திருப்போம். எப்பொழுதும் மனித நேயப் பணிகளில் அக்கறையோடு செயற்படுபவர்களுக்கு தீர்க்கதரிசனப் பார்வையும் இருப்பதால் அடுத்து என்ன செய்யவேண்டும் என்ற எண்ணமும் குடியிருக்கும்.



வன்னியில் செஞ்சோலை, அன்பு இல்லம், பாரதி இல்லம் முதலான போரில் பாதிக்கப்பட்ட குழந்தைகளை பராமரிக்கும் தொண்டு நிறுவனங்களுடனும் சுந்தருக்கு







தொடர்பாடல்கள் இருந்தமையால், வடக்கு – கிழக்கு புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி என்னும் தன்னார்வ அமைப்புடன் North East Rehabilitation and Development Organization (NERDO) இணைந்து இயங்க ஆரம்பித்தார். இந்த அமைப்பின் மேற்பார்வையில் நூற்றுக்கணக்கான பெற்றோரை இழந்த குழந்தைகள் வன்னியில் பராமரிக்கப்படுகின்றனர்.

அந்தக் குழந்தைகளின் தேவைகளுக்காக அவ்வப்போது தாயகத்துக்கு பயணிக்கும் சுந்தர், எப்பொழுதும் பாதிக்கப்பட்டவர்கள் பக்கமே நிற்பவர். 1974 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு வந்தனது முதல் பொதுவாழ்வில் பல மனிதநேய சமூகப்பணிகளில் ஈடுபட்டு வந்திருக்கும் சுந்தர், விக்ரோரியா மாநில அரசின் பல்லின கலாசார ஆணையம் காலம் கடந்துதான், 2016 ஆம் ஆண்டில் மகத்தான சமூகசேவைக்கான பாராட்டு விருதை வழங்கி கௌரவித்தது.

1981 முதல் 2006 வரையில் ஈழத்தமிழ்ச்சங்கத்தின் உறுப்பினராக, துணைத்தலைவராக, தலைவராக, இதழாசிரியராக பல்வேறு பதவிகளில் அங்கம் வகித்திருக்கும் சுந்தர், 1986 முதல் 2009 வரையில் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் ஸ்தாபக உறுப்பினராகவும் இயங்கியவர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

## தாக்குதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்ந்து பதற்றமான சூழல் உள்ளது.

ரஷ்யா தொடுத்துள்ள போரை தடுத்து நிறுத்த உலக நாடுகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வேண்டுகோள் விடுத்துள்ளார். குறிப்பாக, இந்த விவகாரத்தில் இந்தியா தலையிட வேண்டும், ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் இந்தியப் பிரதமர் மோடி பேச வேண்டும் என இந்தியாவுக் கான உக்ரைன் தூதர் இகோர் பாலிகா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ரஷ்ய ஜனாதிபதி புடினை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்றுத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது, தாக்குதலை உடனடியாக நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்தார். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் பேச்சு மூலம் தீர்வு காண வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்நிலையில், உக்ரைனில் உள்ள மாணவர்கள் உட்பட இந்தியர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று ரஷ்ய ஜனாதிபதி புடின் உறுதியளித்துள்ளார்.

## இலங்கையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை அவசரமாக உணவு, மருந்து, அத்தியாவசியப் பொருள்களை பெறுவதற்கு சுமார் நூறு கோடி அமெரிக்க டொலர் (ஏறத்தாழ 22 ஆயிரம் கோடி ரூபா) கடன் திட்டத்தை இந்தியா வழங்கவிருக்கும் அதேசமயத்தில், மேற்படி பாதுகாப்புத் தொடர்பான 3 ஒப்பந்தங்கள் மற்றும் ஏற்பாடுகளும் மறுபக்கத்தில் இறுதி செய்யப்பட்டிருக்கின்றன எனத் தெரியவருகிறது

★ இரண்டு டோர்னியர் விமானங்களை இலங்கை கொள்வனவு செய்தல்.

★ நாலாயிரம் தொன் எடையுள்ள கடற்படை மிதக்கும் கப்பல்துறையை இலங்கைக்கு கையகப்படுத்துதல்.

★ புதுடில்லிக்கு அருகில் தொழில்நுட்ப நகரமான குருகிராமில் உள்ள – இந்தியப் பெருங்கடல் பகுதிக்கான – இந்திய கடற்படையின் தகவல் இணைவு மையத்தில் (IFC-IORஇல்) இலங்கைக் கடற்படைத் தொடர்பு அதிகாரியை கொழும்பு அனுப்பி இணைத்துக் கொள்ளல்.

– ஆகிய கடற்பாதுகாப்புத் தொடர்பான ஒப்பந்தங்களும் உடன்பாடுகளுமே எட்டப்பட்டிருக்கின்றன எனத் தெரிகின்றது.

மேற்படி தகவல் இணைவு மையம் வணிகக் கப்பல் போக்குவரத்தை கண்காணிக்கிறது. மற்றும் கடல் பயங்கரவாதம், பிராந்திய கடல்களில் கடற்கொள்ளையர் போன்ற அச்சுறுத்தல்களை கண்காணிக்கிறது. இப்போதைய ஏற்பாட்டின்படி ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜப்பான், மாலைதீவுகள், சிங்கப்பூர், இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா உட்பட இந்தியாவின் 10 பங்காளி நாடுகளின் பிரதிநிதிகளுடன் இலங்கை தொடர்பு அதிகாரி இந்த மையத்தில் இணைவார்.

இந்தியா வழங்கும் கடற்படையின் மிதக்கும் கப்பல்துறை என்பது போர்க்கப்பல்களின் தரம் மற்றும் விரைவான பழுதுபார்ப்புக்கான தானியங்கி அமைப்புகளுடன் கூடிய ஒரு வசதியாகும். கப்பல்கள் மற்றும் நாசகார கப்பல்கள் போன்ற பெரிய கப்பல்களைத் தூக்கிச் செல்லும் திறன் இத்தகைய கப்பல் துறைகளுக்கு உள்ளது. மேலும் கப்பல்களின் திட்டமிடப்பட்ட அல்லது அவசரகால பழுதுபார்ப்புகளை மேற்கொள்வதற்காக ஒரு 'ஜெட்டி'யுடன் (கப்பல் துறையுடன்) அல்லது அமைதியான நீரில் நங்கூரமிட்டவாறு செயற்பட இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான மற்றொரு சாத்தியமான பகுதி இலங்கைப் படை வீரர்களுக்கு இந்திய வசதிகள் மற்றும் நிறுவனங்களில் பயிற்சியை விரிவுபடுத்துவதும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

## உக்ரைனில் வாழும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அங்காராவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் 24 மணித்தியாலங்களும் இயங்கும் வகையில் உடனடி அழைப்பு நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, 00 90 534 456 94 98 அல்லது 00 90 312 427 10 32 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தூதரகத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி தகவல்களை வழங்கவும், பெற்றுக்கொள்ளவும் முடியும் எனவும் அமைச்சு கூறியுள்ளது.

உக்ரைனில் பதற்ற நிலைமை மேலும் அதிகரித்துச் செல்வதால், அங்கு வாழும் இலங்கையர்களைப் பாதுகாப்பாக நாட்டுக்கு அனுப்புவதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அங்காராவில் அமைந்துள்ள தூதரகத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## பொறுப்புக்கூறல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பச்சலெட் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 49 ஆவது கூட்டத்தொடருக்காக இலங்கை தொடர்பில் அவர் முன்வைத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராணுவமயமாக்கல், இன, மத, தேசியவாதம் என்பன ஜனநாயக நிறுவனங்களைச் சீர்குலைப்பதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் கூறியுள்ளார்.

சிறுபான்மை மக்களை சிரமப்படுத்துவதன் ஊடாக நல்லிணக்கத்துக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையான நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் பொறிமுறையைச் செயற்படுத்துவதற்காக பூரண நோக்கத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசரத் தேவையாக உள்ளது எனவும் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த கால மனித உரிமை மீறல்கள் மீண்டும் நிகழ்வதைத் தடுப்பதற்காகவும் தண்டனை பெறாதிருப்பதை தடுப்பதற்காகவும் நிறுவன, பாதுகாப்புத்துறைகளில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பயங்கரவாதத் தடைத் திருத்தச் சட்டமூலம் தொடர்பிலும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் தனது அறிக்கையில் கவனம் செலுத்தியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை திருத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை தாம் ஏற்றுக்கொண்டாலும், இலங்கையின் உத்தேச திருத்தங்கள் சர்வதேச மனித உரிமை பிரகடனங்களுக்கு அமையப் போதுமானதாக இல்லை எனவும் மிச்செல் பச்சலெட் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை, பலவருடங்களுக்கு முன்னதாக முன்வைத்த பரிந்துரைகள், அவதானிப்புகளை முழுமையாக மீண்டும் பரிசீலனை செய்யுமாறு அவர் இலங்கை நாடாளுமன்றம் மற்றும் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 40/1 தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதில் இருந்து விலகி இரண்டு வருடங்கள் கடந்தாலும் பொறுப்புக்கூறல், நல்லிணக்கத்துக்கான நம்பகத்தன்மையுடன் கூடிய திட்டமிடல் வரைவை இலங்கை அரசு இன்னமும் முன்வைக்கவில்லை எனவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே, 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் உறுதிப்படுத்தல்களைப் பகிரங்கப்படுத்துமாறும் ஆணையாளரின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாலை3.30மணியளவில்கையெழுத்து வேட்டை நடைபெறவுள்ளது.

## ஈ.பி.டி.பி.மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்திகளாக வெளியிட்டு மீண்டும் எம் மீது சேறுபூசும் கைங்கரியத்தை அரங்கேற்றி இருக்கின்றன."

– இவ்வாறு ஊடகங்களை ஓர் அறிக்கை மூலம் வைதிருக்கின்றது ஈ.பி.டி.பியின் ஊடகப் பிரிவு.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் ஊடகப் பிரிவு நேற்று வெளியிட்ட அறிக்கையின் முழு விவரம் வருமாறு:–

ஈ.பி.டி.பி. மீதான விசமத்தனமான அவதூறுகள் கண்டனத்துக்குரியவை யாகும்.

தமிழ் மக்களுக்கு நாம் காட்டிய அரசியல் கொள்கைகளே இன்று நிதர்சனமாகியுள்ள நிலையில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி மீது தொடர்ச்சியாக சுமத்தப்பட்டு வரும் அவதூறுகளையும், உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுக்களையும் நாம் கண்டிக்கின்றோம்.

அண்மையில் இலண்டனில் போர்க் குற்றங்களோடு தொடர்புபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட கைதுகள் தொடர்பான செய்திகளை வெளியிட்ட சில ஊடகங்கள், குறித்த சம்பவத்தை ஈ.பி.டி.பியின் மக்கள் நலச் செயற்பாடுகளுக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் செய்திகளாக வெளியிட்டு, மீண்டும் எம் மீது சேறுபூசும் கைங்கரியத்தை அரங்கேற்றி இருக்கின்றன.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அரசியல் பணியானது, இருப்பதைப் பாதுகாத்துக் கொண்டு, எமது மக்கள் பெற வேண்டியதை நடைமுறைச் சாத்தியமான பொறிமுறையூடாகவும், தேசிய நல்லிணக்கத்தின் பாதையிலும் சாதித்துப் பெற்றுக் கொள்வதேயாகும் என்பதை மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக வலியுறுத்தி வருவது மட்டுமல்லாது நிரூபித்தும் காட்டி வருகின்றோம்.

அதற்கான எமது ஈடுபாட்டையும், அர்ப்பணிப்பையும் பொறுத்துக் கொள்ளாத பயங்கரவாதிகளும், அவர்களின் படுகொலைகளை நியாயப்படுத்தியும், அவர்களுக்குத் துதிபாடியும் பிழைப்பு நடத்தியும் வந்தவர்களால் எமது கட்சியின் பல உறுப்பினர்கள் பலிகொள்ளப்பட்டனர். பலர் புலத்தில் வாழமுடியாத கொலை அச்சுறுத்தல் காரணமாக புலம்பெயர்ந்து போனமையும் கடந்த கால கசப்பான வரலாறாகும்.

இந்த நிலையில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியாகிய நாம் ஒரு போதும் கொலைகளை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. கொலைகளுக்கூடாகப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை கொண்டவர்களுமில்லை என்பதைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

இந்த நிலையில் எம்மீது பல அவதூறுகளை சுமத்தியும் வந்துள்ள தரப்பினர், தற்போதும் எங்கெங்கோ நடந்தேறும் சம்பவங்களை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியையுடன் தொடர்புபடுத்தி விசமத்தனமான உள்நோக்கத்துடன் செய்தி பரப்புவதானது அவர்களின் அரசியல் நீதியான உள்நோக்கம் கொண்ட செயலாகும். அத்தகைய செயற்பாடுகளை நாம் கண்டிக்கின்றோம். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் எரிபொருள் விலை உயர்வு

மீண்டும் எரிபொருள்களில் விலையை லங்கா எரிபொருள் நிறுவனம் உயர்த்தியுள்ளது.

அந்த வகையில், டீசலில் விலை லீற்றருக்கு 15 ரூபாவாலும், பெற்றோலின் விலை 20 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## ஈஸ்டர் தாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பான உண்மையை வெளிக் கொணர்வதில் தாமதம் மட்டுமன்றி, உண்மையை மூடி மறைத்து கொலைகளை அரசியல் ஆதாயத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டு விடயங்களை சிக்கலாக்கும் முயற்சியும் நடந்தது எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தலைவர் வின்ஸ்டன், பதுளை ஆயர் பெர்னாண்டோ மற்றும் அதன் செயலாளர் நாயகம் கொழும்பு உதவி ஆயர் டி.அந்தோணி ஆகியோர் இந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர்.

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)






இதில் அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# சட்டவிரோதமாக மான் வைத்திருந்தவரை மறியலில் வைக்க மட்டு. நீதிவான் உத்தரவு

மட்டு.கரடியானாறு பொலிஸ் பிரிவிலுள்ள பங்குடாவெளி பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றில் அனுமதியின்றி 5 வயது மான் ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

இராணுவ புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய சம்பவதினமான புதன் இரவு 6.45 மணியளவில் பங்குடா வெளி பிரதேசத்திலுள்ள வீட்டை கரடியனாறு பொலிஸாருடன் வனவிலங்கு அதிகாரிகள் முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கு மறைத்து வைத்திருந்த சுமார் 5 வயதுடைய மான் ஒன்றை மீட்டமையுடன் வீட்டின் உரிமையாளரைக் கைது செய்து அவரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது அவரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறும் மானை வனவிலங்கு திணைக்களத்தில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

# பஸ் சேவைகள் முடங்கு அபாயம்

நாட்டில் நிலவும் எரிபொருள் பிரச்சினை காரணமாக, பல்வேறு துறைகளின் போக்குவரத்து பணிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அதன்படி பயணிகள் பஸ் சேவை மற்றும் பொருள்களைக் கொண்டு செல்வதற்கான சேவைகள் உட்பட பல சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான சூழ்நிலையில், 50 சதவீதத்துக்கும் அதிகமான பஸ்கள் சேவையிலிருந்து விலகியுள்ளன என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இன்று முதல் பஸ் சேவைகள் முழுமையாக முடங்கும் அபாயம் உள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ண தெரிவித்துள்ளார்.

# மெல்பன் சுந்தரமூர்த்தியின் ....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

1986 இலேயே ஆஸ்திரேலியா லிபரல் கட்சியிலும் அங்கத்தவராக சேர்ந்தவர். 1991 முதல் 2004 வரையில் சமூகத்தொடர்புச் செயலாளராக ஆஸ்திரேலிய தமிழர் பேரவையிலும் Australasian Federation of Tamil Association (AFTA) 1994 முதல் 2005 வரையில் ஸ்தாபக உறுப்பினராகவும் இணைப்பாளராகவும் Tamil Eelam Economic Development Organisation (TEEDOR) என்னும் அமைப்பிலும் இயங்கி வந்திருப்பவர்.

ஈழத்தமிழர் விவகாரங்கள் தொடர்பான பேச்சுகள் ஆஸ்திரேலியப் பிரதமர்களுடன் நடைபெற்றபோது அச்சந்திப்புகளிலும் கலந்துகொண்டவர். இவ்வாறு தாயகம் சார்ந்த தன்னார்வத் தொண்டு அமைப்புகளிலும் மனித உரிமை அமைப்புகளிலும் அர்ப்பணிப்புடன் இயங்கிவந்திருக்கும் சுந்தர், தனக்கு புகலிடம் வழங்கிய தேசத்திற்கும் விசுவாசம் மிக்கவராக சிறுவர் நலன்கள் உரிமைகளை பேணும் ஒன்றியத்திலும், லயன்ஸ் கழகத்திலும் இணைந்திருப்பவர். விக்ரோறியா மாநிலத்தின் பல்லின கலாசார ஆணையத்தின் ஆலோசகராகவும் அங்கம் வகித்துவருகிறார்.

மற்றவர்களின் உணர்வுகளையும் எண்ணங்களையும் புரிந்து கொண்டு அதற்கேற்ப நட்புறவை வளர்த்துக்கொள்ளும் பண்புகள் சுந்தரிடம் இருந்தமையால், மாற்றுக்கருத்துக்கொண்டிருந்தவர்களும் அவருடன் நேசம் பாராட்டினார்கள்.

சுந்தர் ஆஸ்திரேலியாவில் பதிவுபெற்ற மொழிபெயர்ப்பாளராகவும் இயங்குபவர். மெல்பனில் எழுத்தாளர் நடேசன் சில வருடங்களுக்கு முன்னர் சமூகத்தின் கதை பகிர்தல் நிகழ்ச்சியை ஒழுங்குசெய்தவேளையில், இந்த நாட்டில் தஞ்சமடைந்திருக்கும் சிலர் தமது கதைகளை தமிழில் சொன்னபோது அவற்றை ஆங்கிலத்தில் அழகாக மொழிபெயர்த்தார்.

எழுத்தாளர்களும், சமூகப்பணியாளர்களும் தீர்க்கதரிசனத்துடன் இயங்கவேண்டியவர்கள். ஒரு காலகட்டத்தில் சரியென தீர்மானிக்கப்பட்ட விடயங்கள் பிறிதொரு காலகட்டத்தில் வேறு ஒரு பரிமாணத்தை வந்தடையும். அத்தகைய வேளைகளில் எழுத்தாளர்கள் சமூகப்பணியாளர்களுக்கு கடந்தகால நிலைப்பாடுகள் தொடர்பாகத் தளம்பலும் தோன்றும்.

அவ்வாறு தளம்பல் நிலைவந்தால் விரக்தியும் உடன் வரப்பார்க்கும். அதிலிருந்து மீண்டு, புத்தெழுச்சியுடன் இயங்குவதற்குத் தீர்க்கதரிசனம்தான் பெரிதும் உதவும். அவ்வாறு 2009 இறுதிப் போருக்குப் பின்னரும் மனச்சோர்வடையாமல், பாதிக்கப்பட்ட மக்களின் பக்கமே நிற்கும் நிலைப்பாட்டில் எந்தவொரு தளம்பலும் தடங்களும் இன்றி அயராமல் இயங்கிவரும் சுந்தரமூர்த்தி, தனது பவளவிழாக்காலம் நெருங்கும் சமயத்தில், தனது வாழ்வியல் அனுபவங்களை Dare to Differ என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் புத்தகமாக வெளியிடுகிறார்.

இந்தத் தலைப்பும் சற்று வித்தியாசமானதுதான். இதனைத் துணிந்து மாறுபடு எனவும் மாறுபட அஞ்சேல் எனவும் அர்த்தப் படுத்திக்கொள்ளலாம். அச்சம் தவிர் என்பதும் மனித வாழ்வியலில் ஒரு கோட்பாடுதான். சுந்தர் அவர்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

Dare to Differ நூலின் வெளியீட்டு அரங்கு இன்று (சனிக்கிழமை) மாலை 3 மணிக்கு மெல்பனில் Glen Waverley Community Centre மண்டபத்தில் ( 692-724 , Waverley Road, Glen Waverley 3150 ) நடைபெறும்.

# இலங்கையில் சிக்கித் தவிக்கும் உக்ரைன் நாட்டவர்களுக்கு நெருக்கடி

உக்ரைனை இலக்கு வைத்து ரஷ்யாவின் பாரிய தாக்குதலை அடுத்து அந்நாட்டுக்கான அனைத்து சர்வதேச விமானங்களும் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ள உக்ரைன் நாட்டவர்கள் நெருக்கடி நிலைக்குள்ளாகியுள்ளனர்.

தங்கள் நாட்டுக்கு திரும்பி செல்ல முடியாத நிலைமை காரணமாக தொடர்ந்து இலங்கையில் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதற்கமைய உக்ரைன் நாட்டவர்களுக்கு நாடு திரும்ப எப்போது சந்தர்ப்பம் கிடைக்கும் என தெரியாத நிலையில் தங்கள் உறவினர்கள் தொடர்பில் அவர்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

உக்ரைனின் தற்போதைய சூழ்நிலையால், அங்குள்ள மக்களைத் தொலைபேசி அல்லது ஒன்லைன் மூலம் தொடர்புகொள்வது மிகவும் கடினமான நிலைமையாகியுள்ளது.

அதேவேளை இலங்கையில் தொடர்ந்து தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால், நிதி நெருக்கடிக்கும் அவர்கள் முகங்கொடுத் துள்ளனர் எனத் தெரியவருகிறது.

இதேவேளை ரஷ்யாவின் கடுமையான தாக்குதல் காரணமாக உக்ரேன் நாட்டு மக்கள் அயல் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உக்ரைனில் எஞ்சியுள்ள இலங்கையர்களை பாதுகாப்பாக மீட்பதற்கு நடவடிக்கைகள்

*உக்ரைனில் எஞ்சியுள்ள இலங்கைப் பிரஜைகளை பாதுகாப்பாக மீட்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*இந்த விடயம் தொடர்பாக அங்காராவில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு வெளிவிவகார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.*

*உக்ரைனில் போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளதால், அங்கு நிலவும் நிலைமையைக் கருத்திற்கொண்டு வெளிவிவகார அமைச்சால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.*

*இதன்படி, உக்ரைனில் உள்ள இலங்கைப் பிரஜைகள் அங்காராவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் நிறுவப்பட்டுள்ள அவசர தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

# பாட்டும் நானே? ..........

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனந்தபவனின் முடிவோ! அதுவரை ஏறுவரிசையில் சென்று கொண்டிருந்த நாடகத்தைத் திடீரென இறக்கி, ‘சப்பென்று’ ஆக்கி விட்டது. ஏதோ நெருக்கடியின் பேரில் நாடகத்தை முடித்திருப்பார்கள் போல. பாயாசம் பிழைத்ததற்காக நல்ல விருந்தைப் புறந்தள்ள முடியுமா? கட்டாயம் பார்க்க வேண்டிய நாடகங்களில் ஒன்றாக ‘ஆனந்தபவனை’யும் உங்களுக்கு நான் சிபாரிசு செய்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * சினிமா, அரசியல், உலகஅரசியல், நாடகம், இலக்கியம், இசை எண்டு வாரிதிக்கு எத்தனை முகமடாசாமி?**

**4. கேள்வி:-** பெற்றோல் விலையை மீண்டும் உயர்த்துகிறார்களாமே?

**பதில் :-** பெற்றோல் விலையையும் என்று சொல்லுங்கள். மக்களை உயர்த்தப் போவதாய் இதைத்தான் சொன்னார்களோ? என்னவோ? ஏற்றத்திற்கான சாட்டுச் சொல்ல அரசுக்கு இருக்கவே இருக்கிறது ரஷ்ய – உக்ரேயின் சண்டை. அதனைக் காரணங்காட்டித் தப்பிக்கொள்வார்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ஏமாற்றுகிறவனை விட ஏமாறுகிறவன் தான் பெரிய முட்டாள். ஹி.. ஹி..**

**5. கேள்வி:-**’ ‘பவர்கட்’ வரவர அதிகரித்துக் கொண்டே போகிறதே?

**பதில் :-**சீக்கிரம் முழுமையாய் ‘பவர்கட்’ ஆகலாம் போல் தெரிகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * இவர் ஆற்றை பவர் கட்டாகப் போவது பற்றிச் சொல்லுகிறார்...?**

**6. கேள்வி:-** கிறிஸ்தவர்கள் மன்னாரில், திருக்கேதீச்சரத்திற்கு அருகில் மீண்டும் மடுமாதா சிலையைக் கொண்டுவந்து வைத்து சமயச் சண்டையைத் தூண்டி இருக்கிறார்களே?

**பதில் :-** வெட்கமாய் இருக்கிறது. பாவிகளையும் நேசித்த யேசு பிரானின் வழியில் வந்தவர்கள் என்று சொல்லும் உரிமையை இவர்கள் இழக்கிறார்கள். மதத்தைக் காப்பாற்ற அதன் மாண்பை இழக்கிறார்கள். கண்ணைக் காப்பாற்ற பார்வையை இழப்பதற்கு ஒப்பான செயல் இது. நம் இந்து மதத்தைப் போல் அல்லாது கிறிஸ்தவ மதம் முறையான நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டுள்ளது. இத்தகைய ஒரு முறைகேடான செயல் நடக்கிறபொழுது அதனைப் பார்த்துக் கொண்டு மௌனமாக அந்த சமய நிர்வாகிகள் இருக்கிறார்கள் என்றால், அவர்களுக்கும் அதில் ‘பங்கு’ இருக்கிறது என்பது தெளிவாகிறது. பகை வளர்க்கத்தான் பரமபிதாவை வழிபடுகிறார்களா? இப்படி எத்தனையோ புல்லர்களின் சதிச்செயல்களை தாண்டித்தான் சைவசமயம் இத்தனை ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தும் நிலைத்து நிற்கிறது. ஆகவே நீங்கள் அதிகம் கவலைப்படாதீர்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * மடுமாதாவின் உன்னதம் புரியாத மட ‘மாதாக்கள்’.**

# பெண் ஒருவரின் வங்கிக் கணக்குக்கு வந்தடைந்த 35 லட்சம் ரூபா பணம்!

இலங்கையில் பெண் ஒருவரின் நேர்மையான செயற்பாடு தொடர்பில் சமூக ஊடகங்களில் பாராட்டு குவிந்து வருகிறது.

பெண் ஒருவரின் வங்கிக் கணக்குக்கு தவறுதலாக 35 லட்சம் ரூபா பணம் வைப்பில் இடப்பட்டுள்ளது. எனினும் அதனை உரிய தரப்பிடம் குறித்த பெண் கையளித்துள்ளார்.

கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் மாத்தறை வங்கிக் கிளையில் இருந்து பெண் ஒருவரின் வங்கிக் கணக்கில் 35 லட்சத்து 91 ஆயிரம் ரூபா பணம் தவறாக வைப்பிலிடப்பட்டுள்ளது.

பணம் வந்தவுடன் குறுந்தகவல் ஒன்று அந்த பெண்ணுக்கு கிடைத்துள்ளது. மாலை நேரத்தில் அந்த குறுந்தகவல் கிடைத்துள்ளது.

அடுத்த நாள் காலை தனது மகனுடன் உரிய வங்கிக்குச் சென்று அந்தப் பணத்தை மீள எடுத்து தவறாக வைப்பிட்ட நிதி நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளார். இது தொடர்பான தகவலை ஆதாரத்துடன் மகன் தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

அந்தப் பணம் எங்களுக்குத் தேவையில்லை. மற்றவர்களின் பணத்தில் மகிழ்ச்சியாக வாழ நினைப்பது மிகப்பெரிய தவறாகும். இந்த பணத்தால் நிதி நிறுவனத்தில் பணியாற்றும் மக்களுக்கும் சிக்கல் ஏற்படும். இதனால் பணத்தைத் திருப்பி கொடுத்துவிட்டோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் செயற்பாட்டுக்கு தாய் மற்றும் மகனுக்கு பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.02.2022இல் வெளியிடப்பெற்றது.